ஸ்ரார் பியூப்பில் அக்கடமி
(கல்வியங்காடு)
A. L. 89, 90
வருடங்களுக்குரிய
''புவியியல்''
பிரத்தியேக வகுப்பு
19-12-88காலை 10-00மணிக்கு
ஆரம்பமாகிறது.
ஆசிரியர்:
S ஜேசுதாஸ் B.A. (Hons)
யாழ்நகரில் வேறு இடத்தில்
கற்பிக்கமாட்டார்கள்)

வார
முரசொலி
VARAMURASOLI

STAR
Pupil Academy
( Kalviyankadu )
1989-ம் ஆண்டுக்குரிய
O. L, ஆண்டு
1—10 வரையான
வகுப்புக்கள் ஆரம்பம்
5 - 12 - 88
கணிதம், விஞ்ஞானம்
S. K. ஜீவமோகன்

முரசு 3 ஒலி 7 ஞாயிற்றுக்கிழமை 04-12-1988 (கார்த்திகை 19) ந. ஆகிர் 23 விலை ரூபா மூன்று

★ பாராளுமன்றம் 20-ம் திகதி கலைப்பு ★ அன்றே புதிய ஜனாதிபதி பதவியேற்பு

# பொதுத் தேர்தல் பெப்ரவரி 15ல்

# மார்ச் 9ம் திகதி எம்.பிக்கள் பதவியேற்பர்

## நியமனத்தாக்கல் டிச. 30 முதல் ஜன. 6 வரை

**பாராளுமன்றம் இம்மாதம் இருபதாம் திகதி கலைக்கப்படுமென்றும், புதிய பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல பெப்ரவரி மாதம் 15-ம் திகதி புதன்கிழமை நடைபெறுமென்றும் ஜனாதிபதி நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார். முரசொலி மட்டும் நேற்று பிரத்தியேகமாக அறிவித்தவாறு, ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்று நாட்டுமக்களுக்கு வானொலி, ரூபவாகினி ஆகியன மூலம் ஆற்றிய உரையில் மேற்கண்ட விபரங்களை வெளியிட்டார்.**

புதிதாகத் தெரிவாகும் எம். பிக்கள் மார்ச்மாதம் ஒன்பதாம் திகதி வியாழக்கிழமை தங்கள் பதவிகளை ஏற்பார்கள் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்,

இம்மாதம் 19-ம் திகதி நடைபெறும் தேர்தல் மூலம் தெரிவாகும் புதிய ஜனாதிபதி மறுநாளான டிசம்பர் 20-ம் திகதி செவ்வாய்க்கிழமையே தமது பதவியை ஏற்பார். அன்றைய தினமே தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்படும்.

புதிய ஜனாதிபதி வாக்காளர்களின் கருத்தினை அறிவதற்கு வாய்ப்பாகவே பாராளுமன்றம் இருபதாம் திகதி கலைக்கப்படுவதாகவும் ஜனாதிபதி தமது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள இவ்வருடம் டிசம்பர் மாதம் 30-ம் திகதி முதல், 1989 ஜனவரி ஆறும் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டது.

## ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரை

# எனது பங்களிப்பு முடிகின்றது!

ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்று நாடடு மக்களுக்கு ஆற்றிய உரையின் முக்கிய பகுதி இங்கு தரப்படுகிறது.

இந்தப் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு இன்னும் எட்டு மாதங்கள் உள்ளன. 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தல் 1983-ம் ஆண்டு பெப்ரவரியிலிருந்து 1989-ம் ஆண்டு பெப்ரவரி மாதம்வரை செயல்பட என்னை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தது. நான் 3450811 வாக்குகளைப் பெற்று — அதாவது செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கு மேலாக 180738 வாக்குகளைப் பெற்றேன். இத்தொகை 52·91 சத வீதத்துக்கு சமனானது. 1989-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் திகதிக்கு முன்பாக ஜனாதிபதி தேர்தல் நடந்தாக வேண்டும். இப்போது 1988 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம 19 ஆம திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. ஜனாதிபதி தேர்தலின் போது அல்லது அதற்கு முன்னர் அல்லது அதற்குப் பின்னர் பாராளுமனறத் தேர்தலை சட்டப்படி அல்லது அரசியல் யாப்புப்படி நடத்தவேண்டுமென்ற தேவையில்லை. உலகிலுள்ள எந்த ஜனநாயக நாட்டிலும் இந்த இரு தேர்தல்களும் ஒன்ருக நடத்தப்படுவதில்லை.

டிசெம்பர் 19ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி பதவி யேற்றதும்' எனது நாட்டிலுள்ள அரசாங்கத்துடனான எனது தொடர்புகள் முடிகிறது. தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றதுடனும் அரசாங்ககளுடனும். உறுப்பினர்களுடனுமான தொடர்புகள் அன்று முடிகிறது.

1943 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் 45 ஆண்டுகள் கொண்ட காலப்பகுதியில் எனது நாட்டுமக்களின் வாழ்க்கைக்கும் பொது நலனுக்கும் தொடர்புமிக்க பாரிய முக்கியமான பல நிகழ்ச்சிகள் இடம்

—14ஆம் பக்கம் பார்க்க

## 45 நாட்களுக்கு முன்னரேயே ஜே.ஆர். பதவி துறக்கின்ருர்

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் தற்போதைய பதவிக் காலம் நாற்பத்தைந்து நாட்களால் குறைகின்றது.

1983 பெப்ரவரி நான்காம் திகதி தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக பதவியேற்ற திரு. ஜெயவர்த்தனா 1989 பெப்ரவரி நான்காம் திகதி வரை ஜனாதிபதியாகப் பணி புரிய முடியும்.

ஆனால் இம்மாதம் 19-ம் திகதி தேர்தல் மூலம் தெரிவாகும் புதிய ஜனாதிபதி, இம்மாதம் இருபதாம் திகதியே பதவியேற்பதால், திரு ஜெயவர்த்தனா தமது பதவிக்காலம் முடிவதற்கு நாற்பத்தைந்து நாட்களுக்கு முன்னரே தமது பதவியைத் துறக்கிருர்.

## கோழும்பில் திடீர் ஊரடங்கு ஆயிரக்கணக்கானேர் கைது

கொழும்பின் நகர்ப்புறங்களில் நேற்று திடீரென பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கானேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

பாணந்துறையை அண்டிய இருபது கிலோ மீற்றர் தூரத்துள் ஏழு இடங்களில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு வீடு வீடாகச் சோதனைகள் நடைபெற்றன இதேசமயம் அண்மையில் கொல்லப்பட்ட அமைச்சர் லயனல் ஜெயதிலகவின் கொலைக்கு காரணமான வரை பாதுகாப்புப் படைகள் கைது செய்துள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

### இரண்டாவது சந்திப்பின்பின் அஷ்ரப் தகவல்:

## முஸ்லிம் மாகாண யோசனைக்கு பிரதமர் பிரேமதாஸ ஆதரவு!

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கென தனியான மாகாணம் அமைக்க வேண்டுமென்ற முஸ்லிம் மக்களின் ஆணையை ஏற்பதற்கு பிரதமர் பிரேமதாஸ தயாராக உள்ளதாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஜனுப் எம். ஏ எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார், பிரதமர் பிரேமதாஸவை இரண்டாவது தடவையாக சந்தித்துப் பேசியது தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்

புதன்கிழமை இரவு நடைபெற்ற இப் பேச்சு வார்த்தைகளின்போது பிரதமருடன் அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் ஐ. தே. க. தலைவர் ரஞ்சன் விஜயரட்னவும்கலந்து கொண்டார்கள். ஜனுப் அஷ்ரப்புடன் காங்கிரஸ் அவைத் தலைவர் சேகு இஸாடின் பேச்சுக்களில் பங்கு கொண்டார். இரண்டரை மணி நேரம் நடைபெற்ற இப் பேச்சுக்களின் போது முஸ்லிம் மாகாணம், தேர்தலில் ஆகக் குறைந்த வாக்கு வெட்டு போன்ற விடயங்கள் ஆராயப் பட்டன.

—14ஆம் பக்கம் பார்க்க

### இம்மாதம் ஒன்பதாம் திகதி கொழும்பில்

# மாகாணசபை முதலமைச்சர் ஜனாதிபதிமுன் பதவியேற்பார்

## அமைச்சர்கள் 10-ம் திகதியே பதவிகளை ஏற்பர்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் நாளை திங்கட்கிழமை காலை திருமலை நகரசபை மண்டபத்தில் நடைபெறும் வைபவத்தில் சத்தியப்பிரமாணம் செய்வாகளானுலும், அமைச்சர்கள் பதவியேற்பு நாளை நடைபெருது.

முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் இம் மாதம் ஒன்பதாம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்பார்.

மாகாண சபை அமைச்சர்கள் நால்வரும் இம்மாதம்

—14ஆம் பக்கம் பார்க்க

### ஸ்ரீமாவோ-உமா சந்தித்து பேச்சு

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்குத் தாம்

—14ஆம் பக்கம் பார்க்க

### நெல்லியடியில் இரு இளைஞர் பலி

(கரவெட்டி)

நெல்லியடியை அண்மிய கணேஸ் அறிவாலய சுற்றுப்

—14ஆம் பக்கம் பார்க்க

## முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் நாளை பங்குபற்ற முடிவில்லை

நாளை நடைபெறவுள்ள வடகிழக்கு மாகாணசபையின் முதலாவது கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுபபினர்கள் பங்குபற்றமாட்டார்கள் என்று காங்கிரஸின் அக்கிராசனர் திரு. சேகு இஸாடின் தெரிவித்துள்ளார்.

முதலில் சபையின் கூட்டங்களில் கலந்துகொள்வதா என்பதை காங்கிரஸ் தீர்மானிக்க வேண்டும். அதன்பின்னரே நாளைய கூட்டம் பற்றி யோசிக்க முடியுமென்று தெரிவித்த திரு. இஸாடின் தற்போது தமது கட்சி ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களிலேயே கூடுதலான நேரத்தைச் செலவழித்து வருகின்றது என்றும் சொன்னூர்.

## சிறு விளம்பரம்

### வேலை தேவை

ஆங்கிலத்தில் சுருக்கெழுத்து, தட்டெழுத்து சணக்கியல் மற்றும் ஆங்கில மொழி ஆகியவை படிப்பிக்கக் கூடிய ஒருவருக்கு வேலை தேவை. விளம்பர இலக்கம் 226, c/o முரசொலி, யாழ்ப்பாணம். 12026

### போட்டோப் பிரதி

தற்போது காலை முதல் மாலைவரை எந்நேரமும் பஸ் நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் போட்டோப் பிரதி செய்து கொள்ள மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் யாழ்ப்பாணம் 12034

### விற்பனைக்கு

இறைச்சிக்கோழிகள், விருத்துக் குஞ்சுகள் விற்பனைக்கு எந்நேரமும் கிடைக்கும். உமாபதி, மீனாட்சி அம்மன் வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி. 12068

7 ஸ்ரீ 5016 (Fiat Car) பியற் உடன் விற்பனைக்குண்டு 16/1, மணல் தறை ஒழுங்கை கந்தர்மடம் யாழ்ப்பாணம் அல்லது அம்மன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் 23/1, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். உடன் தொடர்பு கொள்ளவும். 12079

### இலவசம்
### புதிய நாவல்

இப்பொழுது விற்பனையாகும் மழைக்காலம், ராதையின் நெஞ்சம், பூம்பனிமலர்கள், முடிவல்ல ஆரம்பம் நாவல்களில் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பன்களை அனுப்பி "பூஜைக்காக வாழும் பூவை" 30/- குடும்ப நாவலை இலவசமாகப் பெறுங்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம். கவிதா ஸ்டோர்ஸ், வவுனியா. 12069

### செங்கமாரி
### HEPATITIS

சிறுநீர் மஞ்சளாகவோ சிவந்தோ போனால் செங்கமாரி. ஈரலைப்பாதிக்கும். ஆபத்தானது. முதிர்ந்தாலும் குணப்படுத்தலாம். கால் அவியல், தலை அவியல், கபால இடி, மாதவிடாய்கால வயிற்றுக்குத்து, வலி, வாதம், அல்சர், சொறிசிரங்கு குணப்படுத்தித் தேர்ச்சி பெற்றவர். வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம், வங்களாவடி-சாட்டிவீதி, வேலணை. 12005

### மணமகன் தேவை

யாழ். இந்து வேளாள பெற்றோர் தங்கள் 36 வயசான பயிற்றப்பட்ட கணித ஆசிரியை மகளுக்கு தகுந்த மணமகன் தேடுகிறார்கள். வீடு உட்பட தகுந்த சீதனம் கொடுக்கப்படும் குறிப்புடன் முழு விபரங்களும் அனுப்பவும் இல. 225 மே/பா முரசொலி யாழ்ப்பாணம் 12004

வர்த்தகவிளம்பர ஓவியங்கள், உருவப்படங்கள், புளொக்ஸ் ஸ்ரிக்கர் என்பன செய்து கொள்ள

'லங்கா'

கொமேஷல் ஆட்டிஸ்ற்

108/1, ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்

---

### இடமாற்றம்
## இந்திரா ஜுவல்லர்ஸ்

யாழ்ப்பாணம் வின்சர்தியேட்டர் முன்பாக இல. 185 A இல் இயங்கி வந்த இந்திரா ஜுவல்லர்ஸ் ஸ்தாபனம், 01-12-1988 முதல் அதன் அருகாமையில் உள்ள அருணா ஜுவல்லறி கட்டடத்திற்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதென்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இந்திரா ஜுவல்லர்ஸ் ஸ்தாபனத்தார்.

12072

---

### சவுதியில்
## உடனடி வேலைவாய்ப்புகள்

பின்வரும் வெற்றிடங்களுக்கு உடனடியாகச் செல்ல விரும்புபவர்கள் பாஸ்போட் மற்றும் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

| தொழில் வாய்ப்பு | தேவைப்படுவோர் தொகை |
|---|---|
| டிரைவர் (Driver) / கெவி ற்றெயிலர் டிரைவர் (Heavy Trailer Driver) | 06 பேர் |
| ஏயர்போட் கிளினேர்ஸ் & லேபர் | 50 பேர் |
| மேசன், தச்சுவேலையாட்கள் | 25 + 20 பேர் |
| வீட்டுப் பணிப்பெண்கள் | |

ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா மாணவர்களாகச் செலல விரும்புபவர்கள் உடனடியாக வந்து சந்திக்கவும்.

தொடர்புகள்:-

**க. பரமநாதன்**

13, ஆஸ்பத்திரி வீதி,

கொட்டடி, யாழ்ப்பாணம்.

12042

---

### 'கிளீன் கட்'

வாடிக்கையாளர்களுக்கு...

உங்கள் திருப்தியே எமது சேவையாகக் கொண்டு இயங்கும் கிளீன் கட் சேவைகள் ஜெனரேட்டர் மின்சாரம் மூலம் உங்கள் தேவைகளைக் காலதாமதம் இன்றி உடனுக்கு உடன் நிறைவேற்றி வருகின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## 'கிளீன் கட்'

239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

- லெமனேஷன் (பிளாஸ்ரிக்கவரிடுதல்வேலைகள்)
- போட்டோஸ்ரட் பிரதிகள் எடுத்தல்
- எலெக்ரோனிக் ஆங்கில ரைப்பிங் வேலைகள்
- றேனியோ வேலைகள்
- தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகள்

வழமைபோல் நடைபெறுகின்றன.

12064

---

## உடனடிப் பயண ஒழுங்குகள்

(ஒரு மாதத்திற்குள் பிரயாணம்)

### குவைத்: (KUWAIT)

| | | |
|---|---|---|
| Project Manager | 1 | 400 குவைற் டினுர் |
| Asst Engineer | 2 பேர் | 250 ,, ,, |
| Asst.Engineer | 1 | 200 ,, ,, |
| Foreman (civil) | 9 பேர் | 80 ,, ,, |
| Head Foreman | 1 | 100 ,, ,, |
| Surveyor | 1 | 100 ,, ,, |
| Medical Officer | 1 | 100 ,, ,, |
| Accountant | 1 | 100 ,, ,, |
| Store Keeper | 2 பேர் | 100 ,, ,, |
| Office Asst. | 1 | ,, ,, |
| Operators (Heavy Equipment) | 100 / 6 பேர் | 80 ,, ,, |
| Drivers | 4 பேர் | 80 ,, ,, |
| Electricians | 40 பேர் | 70 ,, ,, |
| Welders | 2 பேர் | 70 ,, ,, |
| Plumbers | 70 பேர் | 70 ,, ,, |
| Cement Masons | 70 பேர் | 70 ,, ,, |
| Lime Masons | 70 பேர் | 70 ,, ,, |
| Plaster Masons | 70 பேர் | 45 ,, ,, |
| Helpers | 90 பேர் | 45 ,, ,, |
| Ceramic / Procelen / Tilers / Marble — Masons | 120 பேர் | 70 ,, ,, |
| Carpenters joinery | 10 பேர் | 70 ,, ,, |
| Office Boy | 1 | 45 ,, ,, |
| Cook | 6 பேர் | 55/45 ,, ,, |
| Cook helpers | 10 பேர் | 45 ,, ,, |

மேசன் (Masons), Carpenters, Plumbers Electricians இவர்களுக்கு உடனடிப் பயண ஒழுங்குகள். இவர்கள் உடனடியாக வந்து பெயர்களைப பதிவு செய்து கொள்ளவும்.

### சவூதி அரேபியா: (ஒரு கிழமைக்குள் பிரயாணம்)

| | | |
|---|---|---|
| Plumbers with Driving Experience | 4பேர் | 700 SR |
| Electricians with Driving Experience | 3பேர் | 700 ,, |
| A/CTechnician with DrivingExperience | 2பேர் | 700 ,, |
| Civil Engineer | 1 | 1000-1500 ,, |
| Telephone Technician | 1 | 1200 ,, |
| Welders | 3 பேர் | 800-1000 ,, |
| Fabricators | 4 பேர் | 800-1000 ,, |
| Drivers | 10 பேர் | 500+100 ,, |
| Cleaners | 50 பேர் | 300+100 ,, |

Bahrain-10 நாட்களில் பிரயாணம். மீன் பிடித் தொழிலாளர் 30 பேர் 7500 ரூபா (900 SR)

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும் :

**திரு. அ. தவச்செல்வம்** (B sc. Hons)

(ஆசிரியர்)

நெல்லியான் வீதி, சுழிபுரம்.

12076

---

இலங்கைப் பல்கலைக்கழகங்களின்

## வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்
## கல்வியாண்டு - 1989

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவைகருதி வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள்

### ஜனவரி மாதம் 7-ம் திகதி (7-01-1989) ஆரம்பமாகின்றன

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரேதடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாகசேவை உத்தியோகஸ்தர்கள் பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

★ கலைமாணி G. A. Q., B. A. ★ வர்த்தகமாணி 1st in Com, B.Com

3 வருடங்களில் B. A. பட்டதாரியாகலாம். 4 வருடங்களில் B. Com பட்டதாரியாகலாம்.

விண்ணப்பங்கள் டிசம்பர் 31-ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விபரத்திரட்டினையும் பெற பதிவாளர், அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் என்ற பெயருக்கு ரூபா 10ற்கான காசுக்கட்டளையுடன் 9'' × 4'' அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையை அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்:

## ASTAN INSTITUTE

166/1, Hospital Road, Jaffna.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1-ம் மாடி)

Branch: 101/10, Stanley Road Jaffna.
(மக்கள் வங்கிக்கருகாமையில்)

12044




# பிரதமர் பதவியை பிடித்துள்ள

# முதலாவது முஸ்லிம் பெண்

பதினொரு ஆண்டுகால ராணுவ-சர்வாதிகார ஆட்சியின் பின்னர் பாகிஸ்தான் இப்பொழுது மீண்டும் மக்கள் ஆட்சியில் பிரவேசிக்கின்றது. பாகிஸ்தானிய மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் கட்சியின் தலைவியான பெனுஸிர் பூட்டோ என்ற முப்பத்தைந்து வயதே நிரம்பிய இளம் பெண் பாகிஸ்தானின் முதலாவது பெண் பிரதமராகியுள்ளார்.

எத்தனையோ தடைகளையும், கொலைப் பயமுறுததல்களையும் தாண்டி பாகிஸ்தானின் தலைமைப் பதவியைப் பிடித்துள்ள இப்பெண்மணியால் பாகிஸ்தான் இன்று எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகள் அனைத்தையும் தீர்த்து வைத்து விட முடியுமா என்ற கேள்வி பலரிடம் எழுந்துள்ளது. மக்கள் கட்சியிலுள்ள பிரமுகர்கள் சிலர்கூட இக் கேள்வியை எழுப்பியுள்ளதாக இஸ்லாமாபாத்திலுள்ள பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

### பெனுஸிர் பூட்டோவின் அரசியல் பிரவேசம்

பெனுஸிர் பூட்டோவின் தந்தையான பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோ அவர்கள் ஜெனரல் ஸியாவினால் தூக்கிலிடப்பட்ட பின்னரே பெனுஸிர் அரசியலில் பிரவேசித்தார். 1977ஆம் ஆண்டு தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சுல்பிகார் அலி பூட்டோவின் ஆட்சியை ராணுவப் புரட்சி மூலம் கைப்பற்றிய ஜெனரல் ஸியா 1979-ம் ஆண்டு பூட்டோவைத் தூக்கிலிட்டார்.

இச்சம்பவத்திற்குப் பின்னர் லண்டன் சென்ற பெனுஸிர் பூட்டோ 1986 ஆம் ஆண்டின் முற்பகுதியில்தான் மீண்டும் தாயகம் திரும்பினார். அப்



போது ராணுவ ஒடுக்குமுறைகளுக்கும் அஞ்சாமல் தன்னை வரவேற்பதற்காக லாகூர் விமான நிலையத்தில் கூடி நின்ற இலட்சக் கணக்கான மக்கள் மத்தியில் ''ராணுவ ஆட்சியை முறியடித்து மக்கள் ஆட்சியை ஏற்படுத்தியே தீருவேன்'' என்று கூறியதை இப்போது அவர் நிருபித்துக் காட்டியுள்ளார்.

பெனுஸிர் தாயகம் திரும்பியதையடுத்து அவரது தலைமையில் கிளர்ந்தெழுந்த ''ஜனநாயகத்தை மீளமைப்பதற்கான அமைப்பு''(எம் ஆர் டி) ஸியாவின் அரசாங்கததுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. மக்கள் கட்சி உட்பட ஒன்பது கட்சிகள் இணைந்து ஏற்படுத்திய இவ் அமைப்பு ராணுவஆட்சிக்கு எதிராக மக்களை அணி திரட்டியது. பெனுஸிரைமக்கள முன் பிரபலப் படுத்தவும் இவ்அமைப்பே முக்கிய காரணமாக இருந்தது.

### பெனுஸிருக்கு எதிரான அரசின் திட்டங்கள்

பெனுஸிருக்கு மக்கள் மத்தியில் செல்வாசகு பெருமளவில் அதிகரித்து வருவதைக் கண்ட ராணுவ ஆட்சியாளர்கள் அரசியலிலிருந்து அவரை ஒழித்துக்கட்டுவதற்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்கள். அவர் மீது மேற்கொள்ளப்பட்ட பலவேறு கொலை முயற்சிகளிலிருந்து அவர் உயிர் தப்பியுள்ளார்.

**'ஆர்பி'**

பெனுஸிர் மீது மட்டுமன்றி அவரது குடும்பத்தினர் மீதும் பல தடவைகள் கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன அவரது சகோதரர் ஒருவர் கொலையுண்டதும் குறிப்பிடத்தக்கது.

இதனைவிட தேர்தல்களின் போதும் பெனுஸிர் பூட்டோவை ஆடசிக்கு வராமல் தடுப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது. 1985 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகள் கலந்துகொள்வதற்கு அப்போதைய ஆட்சித்தலைவர் ஜெனரல் ஸியா தடை விதித்தார். இப்போதைய தேர்தலிலும் அதே போன்ற தடையை அவர் விதித்திருந்ததும்குறிப்பிடத்தக்கது. ஆனால் ஸியாவின் மரணத்தையடுதது பெனுஸிர் தாககல் செய்த வழக்கொன்றின் மூலம் அரசியல் கட்சிகள் தேர்தலில் கலந்து கொள்வதற்கான அனுமதி நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது.

பாகிஸ்தான் ஒரு இஸ்லாமிய நாடாக இருப்பதால் அங்கு பெண்களுக்கு எதிரான ஒடுக்கு முறைச் சட்டங்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. இதனை அடிப்படையாககொண்டு பெண்கள் அரசியலிலும், பொது வாழ்விலும் ஈடுபடுவதைத் தடை செய்ய வேண்டுமெனவும் பல தடவை குரலெழுப்பபபட்டது பெனுஸிரை அரசியலிலிருநது வெளியேற்ற எடுக்கப்பட்ட இம் முயற்சியும் வெற்றியளிக்கவில்லை.

''அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் மட்டுமே தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்

## உலக அரசியல்
## சரித்திரத்தில்
## புது அத்தியாயம்
## ஆரம்பம்

கப்படுவார்கள்'' என்பது பெனுஸிரை தேர்தலில் தோற்கடிக்க அரசாங்கம் மேற்கொண்ட கடைசி முயற்சியாகும் பெனுஸிர் பூட்டோவுக்கு கிராமப் பகுதிகளிலேயே பெருமளவிலான ஆதரவு உள்ளது. கிராமப்புற மக்களிடம் அடையாள அட்டை இருக்காது என்பதால் இவ்வாறான ஒரு நடைமுறையை இடைக்கால அரசு தலைவர் குலாம் இஷாக் கான் அறிமுகப்படுத்தினார்.

### பெனுஸிர் கட்சியே தேர்தலில் வென்றது

இவ்வாறான பல்வேறு தடைகளையும் தாண்டி பெனுஸிர் தலைமையிலான மக்கள் கட்சி தொண்ணூற்றிரண்டு இடங்களில் வென்று பெரும்பான்மை பெற்றது இது ஆட்சி அமைக்கக் கூடிய பெரும்பான்மையாக இல்லாத போதிலும், அரசியல் சட்டப்படி அதிகமான இடங்களைப் பெற்ற மக்கள் கட்சியையே ஆட்சி அமைத்து தமது பலத்தை நிருபிக்குமாறு ஜனதிபதி கேட்டிருக்க வேண்டும். ஆனால் பெனுஸிர் ஆட்சி அமைப்பதை தடுப்பதற்காக இவ்விடயத்தில் அரசியல் சட்டத்தையே மீறும் விதமாக செயற்பட முனைந்தார் இடைக்கால அரசு தலைவர் குலாம் இஷாக்கான். 54 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ற பஞ்சாப் முதல்வர் நவாஸ் ஷெரிபின் தலைமையிலான இஸ்லாமிய ஜனநாயக முன்னணி ஆட்சியைக் கைப்பற்றுவதற்த வசதியாக கால அவகாசத்தை ஏற்படுத்திக் கொடுக்க இஷாக்கான் முதலில் முன்வந்தார்.

எனினும் இவ்வாறான நிலை ஏற்பட்டால் அதற்கு எதிராக போராட்டமொன்றை நடத்தப்போவதாக பெனுஸிர் பூட்டோ அறிவித்ததையடுத்துத் தனது திட்டத்தை மாற்றவேண்டிய தேவை இஷாக்கானுக்கு ஏற்பட்டது.

... 13 ஆம் பக்கம் பார்க்க

---

# செயற்கரிய செய்தோர்

சங்கப் புலவர்கள் என்றும் வாழும் ஒப்பற்ற பாடல்களைப்பாடித் தமிழை வளர்த்தார்கள். தமது பாடல்களுக்காகப் பிறர் வியக்கும் அளவு பொற்குவை பெற்றார்கள். எந்த நேரத்திலும் தர்மத்திலிருந்து விலகா உயர்நிலையில் வாழ்ந்தார்கள். அத்துடன் பெருவேந்தராலும் செய்ய முடியாத ஒப்பற்ற பணிகளையும் செய்தார்கள்.

நலங்கிள்ளி என்பவன் சோழ வேந்தன். நெடுங்கிள்ளி என்பவனும் சோழ வேந்தன். சோழர் குலத்துதித்த இரு வேந்தர்க்கும் பகைமை மூண்டது. போருக்கு ஆயத்தமானான் நலங்கிள்ளி. நெடுங்கிள்ளி தங்கி இருந்த உறையூரை முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளி இதனை அறிந்து அரண்மனைக் கதவை அடைத்துவிட்டான்.

கோவூர்க்கிழார் என்னும் புலவர் இதனை அறிந்தார். இருதமிழ் வேந்தர் அதுவும் சோழகுல வேந்தர் போரிடுவதையும் அதனால் சோழ

## கோவூர்க்கிழார்

அரசரும் சோழநாட்டு மக்களும் அழிவதையும் அவரால் சகிக்க முடியவில்லை. உறையூரை முற்றுகையிட்டிருந்த நலங்கிள்ளியையும் கதவடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் சந்தித்தார்.

''நீங்கள் இருவரும் சோழ குலத்தவர்கள். உங்கள் இருவர் மாலையும் அத்திப்பூவாற் கட்டப்பட்டவை போர் ஏற்பட்டால் இருவரும் வெல்வதும் இல்லை ஒருவர் வெல்வார். ஒருவர் தோற்பார் உங்கள் இருவரில் எவர் தோற்றாலும் தோற்பவன் சோழ வேந்தனே தோற்பது சோழர் குடியே அதுமட்டும் அல்ல சோழர் குலத்துதித்த நீங்கள் இருவரும் போரிடுவது சோழ குலத்திற் பொறாமை கொண்ட ஏனைய அரசர்களுக்கெல்லாம் பெருமகிழ்வை ஏற்படுத்தும் அதனால் யாவற்றையும் ஆராய்ந்து பார்த்துப் போரைத் தவிர்த்துச் சமாதானம் அடையுங்கள் என்று கூறினார்.

கோவூர்க்கிழாரின் அறிவுரை கேட்ட சோழவேந்தர் இருவரும் போர் தவிர்த்துச் சமாதானம் ஆயினர். சோழ குலத்துக்கு ஏற்பட இருந்த பேரழிவைத் தடுத்த செயற்கரும் செயல் புரிந்தவர் ஆனார் கோவூர்க்கிழார்.

---

## தரிசனம்

எம் மத்தியில் வாழ்ந்து செயற்கரிய செயல்கள் செய்த பெரியவர்களை மதித்துத் துதிப்பது மரபு.

சிலர் வாழும் போதே கௌரவிக்கப்படுவார்கள். பலர் இறந்த பின்னரே புகழ் பாடிப் போற்றப்படுவார்கள்.

இவர்களில் வெகுசிலரே வாழும் போதும் கௌரவிக்கப்பட்டு, மறைந்த பின்னரும் மக்களால் மதிக்கப்பட்டு நினைவில் நிறுத்தப்படுபவர்கள்.

இவ்வாறான வெகுசிலரில், அண்மையில் சிவபதமடைந்த பிரம ஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளும் ஒருவராவர்.

வாழும் போதே மணி விழா, சஷ்டியப்த பூர்த்தி விழா ஆகியவைகளைக் கண்டவர் சாஸ்திரிகள்.

தமக்கென ஓர் மாணவ பரம்பரையை உருவாக்கி. அவர்களால் என்றென்றும் துதிக்கப்படுபவர் சாஸ்திரிகள்.

கடந்த ஞாயிறன்று சாஸ்திரிகளின் நினைவஞ்சலி வைபவம், அவர்மறைந்த பதினாறும் நாளையொட்டி அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது.

சாஸ்திரிகளின் முதல் மாணாக்கரான பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் இதற்குத் தலைமை தாங்கினார் சுமார் ஐம்பதுபேர் வரையிலானவர்களே பங்குபற்றினர் ஆனால், ஒவ்வொருவரும் ஓராயிரம் பேருக்குச் சமமானவர்கள்.

''சாஸ்திரிகள் நினைவாக சிலை வேண்டாம்; இன்று தலையில்லாத சிலைகளை நாம் பார்க்கிறோம்; மண்டபம் வேண்டாம்; அவைகள் அழிக்கப்பட்டு விடலாம்; எனவே அவர் பெயரில் யாழ். பல்கலைக் கழகத்தின் சமஸ்கிருத பீடத்தில் புலமைப் பரிசில் நிதியொன்றை ஏற்படுத்துவது நல்லது'' என்று பேராசிரியர் அவர்கள் தமது பேச்சில் குறிப்பிட்ட அடுத்தகணமே பத்தாயிரம் ரூபா அங்கு சேர்ந்தது.


இன்னமும் பத்தாயிரம் சேர்ந்தால் அடுத்த வருடமே சீதாராமசாஸ்திரிகள் பெயரிலான புலமைப் பரிசில் ஆரம்பிக்கலாம்.

மனமும் பணமும் படைத்தோர் பேராசிரியருடன் அல்லது நீர்வேலி இராசேந்திரக் குருக்களுடன் அல்லது வண்ணார் பண்ணை பி. ஏ. தம்பி லேனில் வசிக்கும் சாஸ்திரிகளின் குடும்பத்தாருடன் தொடர்பு கொள்ளலாம்.

எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

## சிறுகதை

# பாராட்டு



தெமிட்டி. அ. இராசதுரை

எப்படியும்ஒருநல்லசிறுகதை யாகப் படைத்துவிட வேண்டு மென்ற துடிப்போடு,கற்பனைக் குதிரையில், வேகமாகப் பறந்து கொண்டிருந்த எழுத் தாளன் இராஜ இராஜ சோழன், படலையடியில் சைக் கிள் சத்தம் கேட்ட போது, தனது கற்பனைக் குதிரையின் வேகத்தை, முற்ருகக் குறைத் துக் கொண்டவனுக படலை யடியை எட்டிப் பார்க்கின் ருர்.

படலைத் தூணேடு சைக் கிளைச் சாத்திவிட்டு, படிப் பதற்காக வாங்கிப் போன, அவனுடைய சிறுகதைத் தொகுதியோடு, உள்ளே கிறு கிறென்று நடந்துவந்து கொண்டிருந்தார், பண்டிதர் இராஜநாயகம் மாஸ்ரர்.

"வாருங்கோ...! இருங் கோ..." என்று இராஜ இராஜ சோழன் ஒரு கதிரையை இழுத்துப் போடுகின்ருன்.

"இப்ப இருக்க நேரமில்லைத் தம்பீ..? நானெரு அவசர அலுவலாக ஓரிடத்துக்குப் போக வேண்டியதாக்கிடக்கு" என்று, கிணற்று மிதியில் பிள்ளையை வளர்த்திவிட்டு வந்தவர் மாதிரி அவதிப்பட்ட படியே அந்தச் சிறுகதைத் தொகுதியை, அவன் முன்னு லுள்ள மேசையில் வைத்து விட்டு "அப்ப நான் போய் விட்டு வாறன் தம்பீ?" என்று ஏதோ ஓடித்தப்பி விடுபவர் போல், காலெடுத்து வைத் தார்.

எழுத்தாளன் இராஜஇராஜ சோழனின், முகத்தில் கவலை படருகின்றது. வந்த மனிதன், தன்னுடைய கதைகளைப்பற்றி ஒரு வார்த்தையும் கூற வில்லையே என்ற அங்கலாய்ப் பில், "எப்பிடி மாஸ்ரர், என்ரை கதையள்...? உங் கடை விமர்சனம் என்ன?', என்று மனம் பொறுக்காமல் எழுத்தாளர் பாணியில், ஆவ லோடு கேட்டு வைக்கின்ருர்

அப்பொழுது தான், சைக் கிளை உருட்டத் தொடங்கிய இராஜநாயகம் மாஸ்ரர்,

"அட சீ? நான் மறந்து போனனே.....?" என்று சைக்கிள் ஆசனத்தில் அடித் துக் கொண்டே,

"தமிழ் மன்னன் இராஜ இராஜசோழனின் புகழைப் போலவே, உம்முடைய கதை களும் இருக்கின்றன. என்னுடைய வாழ்க்கையிலை, இப்பிடியான கதைகளை, நான் சத்தியமாகப் படிக்கேலை? நானும், உம்மைப்போலை ஒரு எழுத்தாளனுக வரேலையே எண்டு கவலைப்படுகிறன். உம்மைப் பார்த்துப் பொரு மைப்படுகிறன்" என்றெல் லாம் மாஸ்ரர் அளந்து கொட் டிக் கொண்டிருக்க, எழுத்துக் கலையோடு, எழுத்துக் கலை யாக, இரண்டறக் கலந்து விட்டவன் போல, தன்னை மறந்தே, சொக்கிப்போய் நின்றுவிட்ட இராஜ இராஜ சோழன் "அத்தான்!" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தபோது மாஸ்ரரைக் காணவில்லை. அவன் மனைவி இராஜமலரே அவன் முன்னுல் நின்று கொண்டிருந்தாள்.

"அட! இந்த மனிசன் போகேக்கை போட்டுவாறன் எண்டு ஒரு சொல்லுச் சொல் லாமல்" என்றெல்லாம் அவன் அங்கலாய்த்துக் கொண்டான்.

"அவர் போட்டுவாறன் தம்பீ... எண்டு சொன்னதெல் லாம் என்ரை காதிலை விழுந் தது. உங்கடை காதிலைவிழ நீங்கள் இந்த உலகத்திலை இருந்தால்தானே" என்று பகிடியாகச் சொன்ன இராஜ மலர்,

'ஏனத்தான், மாஸ்ர ரின்ரை பாராட்டோடை, நீங்கள் இந்த மேகமளவுக்கு வளந்திட்டீங்க?" என்று கேட்டுவிட்டு, அவனுடைய முகத்தையே உற்றுப் பார்க் கின்ருள்.

"ஒரு எழுத்தாளனுக்கு இதைவிட ஒரு வளர்த்தி வேறென்ன சொல்லுபாப்பம் மலர்...?" என்று அவன் பெருமையாகக் கேட்டான்.

சலசலத்தோடும், அழகான நீரோடையாக துள்ளித் தெறித்த சிரிப்பு அவளிடம் காட்சி கொடுக்கின்றது.

"அவருடைய பாராட்டுக்கு எந்தவிதமான பெறுமதியும் இல்லையென்று எந்தச் சட்ட மன்றத்திலும், நான்வாதாட, வழக்காடத்தயார்" என்று அவள் இப்படியொருகுண்டை வெடிக்க வைத்ததும் அவன் ஒருபனையளவுக்குத் தூக்கி விசப்பட்ட டிரக்வண்டியாக அதிர்ந்து குலுங்கிப்போனுன். வெடிக்கத் தொடங்கிய துப் பாக்கியாக அவள் கதைக்கத் தொடங்கினுள்.

"உங்கடை சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா விற்குத் தலைமைவகித்த இந்த மாஸ்ரர் என்ன பேசினுர் எண் டதைஉங்களை அவர் பாராட் டேக்கை நீங்க யோசிச்சுப் பார்த்தீங்களா அத்தான்...?" என்று அவள் அடியெடுத்துக் கொடுத்தாள்.

"பாராட்டு! பாராட்டு!" என்ற வார்த்தை மட்டும் அவனைச் சுற்றி வேகமாக வட்டம்போட அவன் பக்கத் துச் சூழலையே மறந்தவனுக கற்பனைக் குதிரையில் வேக மாகப் பறக்கின்ருன். எக்ஸ் பிரஸ் ரயில் ஓடும்போது ஜன்னலூடாக மின்னி மறை யும் காட்சிகளாகக் கற்பனைக் காட்சிகளின் ஓட்டம்... ..!

திடீரென்று எதையோ உறுதியாகக் கண்டு பிடித்து விடடவன் போல் தனக்குள் துள்ளிக் குதித்துக் கொண் டவன் ஒருவித எழுத்து வெறி பிடித்தவனுக மேசையடிக்கு ஓடுகின்ருன்.

தான் எழுதப்போகும் சிறு கதைக்கு 'பாராட்டு' என்ற தலைப்பைப் போட்டுவிட்டு தனது சிறுகதைத் தொகுதி யைய்ய மையக் கருவாக வைத்து தன்னையும் மாஸ்ர ரையும் தனது மனைவியையும் பாத்திரங்களாகச் சுழலவிட்டு கதையை வேகமாக ஓடவைத் தான்.

'பாராட்டு' என்றகதையை எப்படி முடிக்கலாமென்ற சிந்தனையில் தண்டவாளம் பிசகி மேலும் ஓடமுடியாமற் போன எக்ஸ்பிரஸ் ரயில் வண்டியாக தடைப்பட்டுக் குழம்பிக் கொண்டிருந்தான்.

தேநீரோடு வந்து கொண் டிருந்த அவன் மனைவி அவனு டைய வெறிகாரன் கோல முகத்தைப் பார்த்துவிட்டு ஒன்றும் பேசாமல் தேநீரை மாத்திரம் மெல்லமாக வைத்துவிட்டு ஓசைபடாமல் அப்பால் போய்விடுகின்ருள்

அவன் அந்தத் தேநீர் கப் பைக் கூடத்திரும்பிப் பார்க் காமல் 'பாராட்டுக்' கதைக்கு ஒருமுடிவைத் தேடி கற்பனைக் குதிரையில் சிந்தனைக் காடு மேடெல்லாம் களைக்க இளைக்க சுற்றி மேலும் மேலும் குழம்பி மூளை வலிக்கத் தொடங்கியது.

மூளைக்கு ஆறுதல் கொடுக் கும் நோக்கத்தோடு சைக்கி ளில் ஏறி நிழல்பரப்பி குளிர் மையை அள்ளித்தரும் பனந் தோப்பினூடாக மாஸ்ரர் வீட்டை நோக்கி மன அமை திக்கு விருந்து வைப்பது போல் சைக்கிளில் ஆறுதலாக ஓடிக்கொண்டிருந்தான். அவ னுடைய சிறுகதைத் தொகு தியைப் படித்த மூன்றுநான்கு பேர் வழியில் கண்டு தலை யாட்டிச் சிரித்தபோது அது அவனுக்கு எவ்வளவோ பெரிய சுகமாக இருந்தது.

ஏதோ சிந்தனையில் மாஸ்ர ரின் வீடுதள்ளி அப்பால் போய்விட்டவன் மாஸ்ரரின் வீட்டிற்குத் திரும்பி வந்து படலையடியில் நின்றபோது மாஸ்ரருக்கும் மகளுக்குமிடை யில் சண்டை நடக்கும் சத் தம் அவன் செவிகளில் வந்து விழுகின்றது.

ஏதோ அந்தச் சண்டையில், தன்னுடைய 'சிறுகதைத் தொகுதி' என்ற சொல்லும் அடிபடுவது அவன் செவிகளில் வந்து விழுகின்றது. அவன் தனது செவிகளைக் கூர்மை யாக்கிக் கொண்ட நேரமாக, அவனுடைய சைக்கிள் டியூப் படாரென்று வெடித்துத்தள்ளி விடுகின்றது.

ஐயோ என்ற சத்தத் தோடு ஆமிக்காரரின் கலக்கத் தோடு வாசலுக்கு ஓடிவந்த மாஸ்ரர்வீட்டுக்காரர், அங்கே

—13ஆம் பக்கம் பார்க்க

★ ★ சிந்தனைக்கதை

# ஆற்றுமை

அமைதியின் இறகு களால் ஆரத்தழுவப்பட்ட இராக்காலம். எங்கும் ஒரே இருள் நீக்கமறப்படர்ந்திருந் தது.

ஆந்தை ஒன்று ஊக் ஊக்... என்று தன் அவலச் சுரத்தை வாசிக்கத்தொடங் கியது.

"அபசகுனம்... அபத்தம் .. கேட்கவே சகிக்காத இந்தப் பாடலைத்தான் தினமும் பாடு கின்ருயே உன் காதுக்கு இது ரம்மியமாக இருக்கின் றதோ" என்று கேலியாகப் பேசியது வெளவால்.

உலகத்தின் நன்மை, தீமை களை அறியாது தலைகீழாகத் தூங்கிக் கொண்டிருக்கும் உனது சந்ததிக்கு என் பாட் டெங்கே புரியப்போகிறது. நீ பொல்லாங்கு பேசுவதால் தானே உனக்கும், உன்னினத் திற்கும் தலைகீழாகத் தொங் கும் சாபம் கிடைத்தது என்று சாட்டையடி கொடுத்து விட்டு மீண்டும் ஆந்தை உறுமத் தொடங்கியது.

கேலியாகச்சிரித்தவெளவால் மீண்டும் பேசத்தொடங் கியது. மனிதனே இப்போது தான்... விண்வெளி ஆய்வின் பின் தான் என்னைப்பற்றிப் புரிந்திருக்கும் போது சமான்ய னுன உனக்கு எங்கே என் பெருமை புலப்படப் போகி றது என்று தன் பெருமைக்கு மனிதனைச் சாட்சிவைத்தது.

மெத்தப் படித்துவிட்டாய் வீணனே. ஆந்தை அகவற் பலன்கள் என்ற எனது பாடலை மூலமாக வைத்துப் புத்தகங்களை வெளியிட்டிருக் கிருர்களென்று நீ அறிய வில்லையா? அதுதான் மதி கெட்டுத் தலையை நிமிர்த்த மாட்டாமல் தினவெறியனு கித் தூங்கும் உன்னேடு என்ன பேச்சு.. என்று ஆந்தை கோபமாகப் பேசி விட்டுத் தன் அலகினை மரக் கொப்பில் உரசியது.

"றடார்" என்னைவைத்தே விஞ்ஞானிகள் கண்டுபிடித் தார்கள் என்பது படித்த வனுக்கன்றே தெரியும். நீ படிக்காதவனென்பதைப்பறை சாற்றத்தானே மோகனம் பாடும் குயில்கள் இருப்பதை அறியாது தினம் தினம் அவ லக்குரலில் முகாரி பாடுகிருய். உனக்கு என் திறமையைப் பற் றிச் சொல்கிறேன் பொறுத் திருந்து கேள் புவி ஈர்ப்பை எதிர்த்துச் சரியாக நிற்பவன் உலகில் நான் ஒருவன் தான். மனிதன் கூட இதற்கு விதி விலக்குத்தான் விண்வெளிஆய் வின்போது அண்டவெளியில் நின்று மனிதன் பூமியைப் பார்த்து "எல்லாம் தலைகீழா கத் தெரிவதாகச் சொன் னவன் வெளவால் மட்டும் சரி யாக நிற்பதாகச் சொன் ஞனே" அது போதுமே என் மகிமைக்கும், பெருமைக்கும் என்று பரணிபாடிச் சாதித் தது வெளவால்.

ஆந்தை வெளவாலுக்கு எதி ராகச் சொல்லத் தன்னிடம் ஒன்றுமில்லையே என்று ஏங்கி யது. ஏங்கிய ஏக்கத்தோடு எங்கோ பறந்துவிட்டது.

வெளவாலுக்குப் பெரு மையும், செருக்கும் பிறந்து விட்டது. தன் பெருமையே பெருமை என்று ஊஞ்சல் ஆடிக்கொண்டிருந்தது.

எங்கோ வெகுதொலைவில் இருந்து ஆந்தை சொன்னது, "இவன் தலைக்கனம் மிஞ்சிப் பேசுவதால்தான் உவன் சந் ததியே தலைகீழாய்த் தூங்குது கள்" என்று.

வளவை வளவன்

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

**04-12-88 -- 10-12-88 வரை**

**மேடம்:** விண்விரயம், இனப்பகை, வாகன மாற்றம், பெரியோரால் நன்மை, தூர தேச பிரயாணம், பெண் களால் கவலை, தொழில்மாற் றம்.

**ரிஷபம்:** வாகன சுகம், பெரியோராதரவு, திடீர் அதிர்ஷ்டம், இளையசகோதரர் வழி விவாகம், இருதொழில் வருமானம், பணவரவு, இயந் திர வாணிபத் தொழில் புரி வோருக்கு நன்மை.

**மிதுனம்:** மாதாவழி கவலை, வாகனநஷ்டம், வெளி யூர் சென்றவர் வருகை, எதிர்ப்பாலாரால் நன்மை, விருந்துபசாரம், இயந்திர கடல்தொழில் செய்வோர்க்கு லாபம்.

**கடகம்:** பெரியோர் வருகை, பிரிந்தவர் ஒன்று சேருவர், கல்வியால் தொழில், கைத்தொழில் செய்வோர்க்கு நன்மை, வாகன லாபம், பெற்ருேர்வழி நன்மை.

**சிங்கம்:** பணவரவு, வாகனசுகம், எண்ணிய எண் ணம் ஈடேறும், வெளிநாட்டுப் பிரயாணம், தடைப்பட்ட காதல் நிவர்த்தி, புதுத் தொழில், மூத்த சகோதரர் வழி உதவி.

**கன்னி:** வாகனநஷ்டம், காதலர் உறவில் பிணக்கு, பதவி உயர்வு, இடமாற்றம், தூரதேசம் போனர் வருகை, வணிகர்களுக்கு சமபலன்.

**துலாம்:** காதல் குடும்ப பகை, இடமாற்றம். மனையில் மனக்கிலேசம், வாகனக் கஷ் டம், சகோதரர்வழியுதவி, தொழில் இடமாற்றம், புண் ணிய வழிபாடு.

**விருச்சிகம்:** வீண் விர யம், இடமாற்றம், புதுத் தொழில், தெய்வ வழிபாடு, உடல்நலக் குறைவு, வாகன வணிக கடல் தொழில் செய் வோர்க்கு லாபம்.

**தனுசு:** தூரத்து செய்தி யால் மனநிறைவு, எண்ணிய எண்ணம் பலிதம், தெய்வ கடாட்சம், வாகனசுகம், கடல் இயந்திரத் தொழிலா ளர்களுக்கு லாபம்.

**மகரம்:** பெண்களால் உதவி, பெரியோராதரவு, கல்வி யால் கௌரவம், உத்தியோக உயர்வு, இருதொழில் வரு மானம், லட்சுமி கடாட்சம், மனையில் மங்கள காரியம்.

**கும்பம்:** பிதாவழி மகிழ்ச்சி, வாகன சுகம், இரு தொழில் வருமானம், தூர தேச பிரயாண சுகம், வர்த் தகர், தொழிலாளர் லாபம டைவர். காதலர் ஒன்றுசேரு வர்.

**மீனம்:** வாகன லாபம், சகோதரர் வழிபகை, இட மாற்றம், உடல் நலக்குறைவு, எண்ணிய எண்ணம் தடை, பணமுடை, பெரியோரால் உதவி,

## வைத்திய கலசம்

# சிபிலிஸ் என்னும் மேகப்புண் பின்விளைவுகளை ஏற்படுத்தும்

டாக்டர் எம். கே. முருகானந்தன் M. B. B S. (Cey)

* அலட்சியப்படுத்தக்கூடிய சாதாரண உபாதைகளற்ற அறிகுறிகளுடன் ஆரம்பத்தில் தோன்றினாலும், மிகவும் பாரதூரமான பின்விளைவுகள் உண்டாக்கும் பாலியல் நோய்தான் 'சிபிலிஸ்' (Syphilis) எனப்படும் மேகப்புண் நோய்.

* கொனரியா போல் இந்நோய்க்கான அறிகுறிகள் உடனடியாகத் தோன்றுவதில்லை. நோயுற்றவருடன் உடலுறவு கொண்டபின் நோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் தோன்ற 10 – 90 நாட்கள்வரை செல்லலாம்.

* கிருமி தொற்றிய பகுதியிலேயே ஆரம்ப அறிகுறிகள் தோன்றும். எனவே பாலியல் உறுப்புகளிலேயே நோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் வெளிப்படும். எனினும் முறைகேடான பாலியல் உறவுமுறைகள் காரணமாக வாய், உதடு, விரல்கள் அல்லது மலவாசல் போன்ற இடங்களிலும் தோன்றலாம்.

* நோயின் வளர்ச்சியையும், அறிகுறிகளையும் மூன்று முக்கிய நிலைகளில் பொதுவாக விபரிப்பார்கள். ஆரம்பத்தில் (1-ம் நிலை) பாலுறுப்பில் சிறு பருப்போல் தோன்றி, சிறிது பருத்து, உடைந்து கிரந்திப் புண்போல் தோற்றமளிக்கும். இதிலிருந்து நீர் போன்ற திரவம் வடியும்.

* இப்புண்களில் நோ, வலிப்பு, அரிப்பு, சொறிவு போன்ற எந்தவித அசௌகரியமும் இருக்காது ரப்பர் போன்ற நெறிகள் அரையில் தோன்றும். இந்நெறிகளும் எந்தவித வேதனையையும் கொடுப்பதில்லை. வேதனை கொடுக்காத இப் புண்களையும், நெறிகளையும் பலரும் அலட்சியப்படுத்தி விடுவார்கள்.

* வைத்தியம் செய்யாவிடில்கூட மேலே கூறிய புண்கள் தானே மாறிவிடும். ஆனால் கிருமி, இரத்தம்மூலம் பரவி உடல் முழுவதும் குணங்குறிகளை ஏற்படுத்தும். இந்த 2-ம் நிலையில் உடல் முழுவதும் றோஸ் நிறமான தடிப்பு, மலவாயில் போன்ற ஈரலிப்பான இடங்களில் புண்கள், தலைமுடி பட்டை பட்டையாக உதிர்தல் போன்ற குறிகளை ஏற்படுத்தலாம்.

* இரண்டாம் நிலையும்கூட வைத்தியம் செய்யாவிடினும் தானாகவே மாறிவிடும். 3-ம் நிலை 2 – 30 வருடங்களுக்குப் பின்னரே தோன்றும். இந்நிலையில் கிருமி உடலில் பல உறுப்புகளை (தோல், எலும்பு, நாக்கு, விதை, ஈரல், மூளை, இருதயம், இரத்தக்குழாய்) தாக்கி பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும். இதனால் புத்தி சுவாதீனம், பாரிசவாதம், இருதய நோய்கள் போன்ற மோசமான பாதிப்புகள் உண்டாகலாம்.

* பெண்களில் இந்நோயின் ஆரம்ப அறிகுறிகள் பெரும்பாலும் பாலுறுப்பின் உட்பகுதிகளிலேயே உண்டாவதால், தான் நோயுற்றதை அவள் உணரமாட்டாள்; நோய் பரவி 2-ம் நிலையை எட்டிய பின்னரே வெளியே தெரியக்கூடிய அறிகுறிகள் தோன்றும்.

* கர்ப்பிணிப் பெண்ணிற்கு சிபிலிஸ்நோய் இருந்தால் அது பல பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். கருச்சிதைவு, குழந்தை வயிற்றிலேயே இறந்து பிறத்தல், குறைமாதப் பிரசவம், அங்கக் குறைபாடுடைய குழந்தைகள் பிறத்தல் என்பன போன்ற விளைவுகளை ஏற்படுத்தும்.

* இருபாலாருக்குமே பாரிய பின்விளைவுகளை உண்டாக்கக்கூடுமாதலால், நோயின் ஆரம்ப அறிகுறிகளுடனேயே, நோய் தொற்றியிருப்பதை உணர்ந்து, உடனடிச் சிகிச்சை பெறவேண்டும். அறிகுறிகள் இல்லாவிடினும், நோய் தொற்றுவதற்கு ஏதுவான நடத்தையில் ஈடுபட்டிருந்தால் வைத்திய ஆலோசனை பெறுவது அவசியம்.

* ஆரம்ப நிலைகளில் நோய்ப் புண்களில் சுரக்கும் நீரை ஆராய்வதன் மூலம் நோய் இருப்பதை நிச்சயப்படுத்தலாம். 4-12 வாரங்களின்பின் VDRL போன்ற இரத்தப் பரிசோதனைகள் இந்நோயிருப்பதை நிச்சயப்படுத்த உதவும்.

* இந்நோயைக் குணப்படுத்தவும் பெனிசிலின் ஊசி மருந்தே முக்கியமாகப் பயன்படுகிறது நீண்ட நாட்களுக்கு ஏற்றப்பட வேண்டியிருக்கும். 2-ம், 3-ம் நிலைகளில் மிக நீண்ட நாட்களுக்கு வைத்தியம் செய்ய வேண்டியிருக்கும்.




## துணுக்கு தகவல்கள்

● சிகரெட் பிடிப்பவர்கள் அதனை அணைக்காது விடுவதால் ஏற்படும் விபத்துக்களை தவிர்க்க டென்மார்க்கின் 'கோஜ் ஜென்சன்' என்பவர் தரும் புதுமுறை. தண்ணீர் கொண்ட சிறு பிளாஸ்டிக் பையை சிகரெட் கட்டைக்கு மேல் வைத்தால் சிகரெட் முடிந்ததும் தானாக அணைந்துவிடும்–இது வே இவரது யோசனை. இது தற்போது ஆய்விலுள்ளது.

● சீனாவின் தலைநகரான பீக்கிங்கில் ஒரு திருமண வரவேற்பில் மணமகன் மிகுந்த வேகத்துடன் மணமகளின் கழுத்தில் முத்தமிட்டுக் கொண்டிருந்தான். இதன் விளைவு மணமகளுக்கு இதயப்படபடப்பு அதிகமாகி மரணமடைந்தாள்.

★ தமிழாளன்

## தெரிந்து கொள்ளுங்கள்

ஒட்டகத்தின் திமிலானது நூற்றுக் கணக்கான றாத்தல் எடையுள்ள கொழுப்பை சேமித்து வைக்கக் கூடிய ஓர் அறையாகும்.

உலகிலேயே 'கொலஸ்திரோல்' இல்லாத மாமிசம் கங்காருவின் மாமிசமே.

பல்லியானது, எதிரிகள் தாக்க வரும் போது தனது வாலைக் கழற்றிப் போட்டுவிட்டு ஓடும்.

உலகிலேயே மிகப் பெரியபறவை 'ஆல்பட் ரஸ்' ஆகும். இதன் இறக்கைகளின் நீளம் பதினொரு அடிக்கும் அதிகம்.

உலகிலுள்ள வண்ணாத்திப் பூச்சிகளிலேயே மிகப் பெரியது"டானல்"எனப்படும் வண்ணாத்திப் பூச்சியாகும்.

உலகிலேயே மிகச் சிறிய பறவை க்யூபா நாட்டிலுள்ள தேனீயாகும். இதன் நீளம் 2 செ.மீ.

உலகிலேயே நீளம் பாய்வதில் முதலிடம் வகிப்பது கங்காரு ஆகும். இது பாயும் தூரம் 42 அடி.

உலகில் அதிக வேகமாக ஓடக்கூடிய மிருகம் மான் மணிக்கு 63 மைல் வேகத்தில் ஓடும்.

உலகிலேயே முதன் முதலாக தோன்றியதாக கூறப்படும் மிருகத்தின் பெயர் "இகதியோ ஸ்டிகா".

கொக்கானது (ஆணும் பெண்ணும்) தன் துணையை இழந்தால் வேறு துணையைத் தேடிக் கொள்வதில்லை.

மிக வேகமாக நீந்துவது சுறு

பல்லுள்ள பறவை 'வௌவால்'.

மீன்களிலேயே அதிக விஷம் உடையது 'ஸ்டோன் பிஷ்' என்ற கல் மீனே.

உலகிலுள்ள மிகப் பெரிய திமிங்கிலத்தின் பெயர் Sulphur bottomed whale. இதன் நீளம் 110 அடி எடை 95 டன். Sail Fish எனப்படும் ஒருவகை மீன் மணிக்கு 63 மைல் வேகத்தில் நீந்தும்!

தொகுப்பு செ. தயாபரன்

## பெயர்கள் எப்படி வந்தன?

மணலாறு என்பதே மருவி மன்னார் ஆகியது முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மணலாறு "வெலி ஓயா" வாக மாறியுள்ளது;

மன்னாரிலுள்ள பள்ளிமுனை ஒரு மீன்பிடிக் கிராமம் ஆகும். பல்லிமுனையே பள்ளி முனையாக மாறியது. கடலுக்குள் இந்தக் கிராம நிலப்பரப்புப் பல்லி முனைபோலத் துருத்திக் கொண்டிருப்பதால் இந்தப் பெயர் ஏற்பட்டது.

எருக்கலம்பிட்டி ஒரு முஸ்லிம் கிராமம் ஆகும். அக்காலத்தில் இங்கிருந்து, யாழ்ப்பாணத்திற்கு கலங்கள் மூலமாக எரு ஏற்றிச் செல்லப்பட்டது. இதனால் இப்பெயர் ஏற்பட்டது.

சண்டைச் சேவல்களைக் கட்டுச் சாவல்கள் என்பர். இவ்வாறு சேவல்களைச் சண்டை பிடிக்கவிட்ட இடம் சாவல்கட்டு எனப்படுகிறது

வர்ணம் தீட்டும் எழுத்தர்கள் இருந்த இடம் எழுந்தூர் எனப்படுகிறது. ஆங்கிலத்தில் "பெயின்ரர்ஸ் ஸ்றீற்' எனப்படுகிறது

'மோட்டை" என்பது சிறிய குளங்களைக் குறிக்கிறது. வண்ணாமோட்டை, களிமோட்டை, போன்று பல இடங்கள் மோட்டையோடு முடிகின்றன மன்னார் மாவட்டத்தில் இந்த மோட்டைகள் உள்ளன.

★ அரஸ்

## நெல்சன் மண்டேலாவின் சிறை அனுபவம்!

தென்னாபிரிக்க நிறவெறி அரசை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் 68 வயதான நெல்சன்மண்டெலா கடந்த 26 வருடங்களாக சிறைவாசம் அனுபவித்து வருகிறார். அண்மையில் காமன் வெல்த் குழுவைச் சேர்ந்தவர்கள் இவரைச் சிறையில் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள்.

தென்னாபிரிக்க அரசால் இராசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்ட மண்டெலா, கேப்கடற்கரை ஓரமாக கரடு முரடான மலைப்பகுதியில் அமைந்த ராப்பன் தீவிலுள்ள சிறைச்சாலையில் வைக்கப்பட்டார்.

கொதிக்கும் வெய்யிலில் சுண்ணாம்புக்காளவாயைத் தோண்டும் வேலை மண்டெலாவுக்கு தரப்பட்டது. மன உறுதி படைத்த இவர் அதைச் சவாலாகஏற்று, கைகால்கள் கொப்பளிக்க, உடல் எரிச்சலையும் பொருட்படுத்தாது வேலை செய்தார்.

இதன் பின்னர் கடலிலிருந்து கடற்பாசி எடுக்கும் வேலை இவருக்குத் தரப்பட்டது வெளி உலகத்திலிருந்து முழுவதுமாகத் தொடர்பற்றிருந்த மண்டெலாவுக்கு கடல்பாசி வேலை மிகவும் பிடித்தது. ஏனென்றால் சுதந்திரக் காற்றையும் கால்களைத் தழுவும் கடலின் அலைகளையும், அந்தப் பக்கமாக வரும் கப்பல்களைப் பார்க்கும் வாய்ப்பும் கிடைத்ததால் இந்த வேலையை மிகவும் விரும்பிச் செய்தார் மண்டெலா.

சிறையில் அரசுக்குத் 'தாளம்' போடும் பத்திரிகைகள், புத்தகங்களை மண்டெலாவுக்குப் படிக்கக் கொடுக்கப்பட்டது! எப்போதாவது வீட்டுக்கு ஒன்றிரண்டு கடிதங்கள் எழுத அனுமதிக்கப்பட்டார். அதுவும் குடும்ப விடயங்களைத் தவிர வேறெதுவும் எழுதக் கூடாது.

இந்தச் சிறையில் 20 ஆண்டுகள் வாசம் செய்த மண்டெலா தற்போது இருக்கும் 'போல்ஸ்மூர்' சிறைக்கு 1981-ம் ஆண்டு மாற்றப்பட்டார். இங்கே வந்த பிறகு மண்டெலாவை நடத்தும் விதத்தில் சில நல்ல மாற்றங்கள் ஏற்பட்டன. அவர் கண்ணியமாக நடத்தப்பட்டார்.

"விடியற்காலை மூன்றரை மணிக்கெல்லாம் எழுந்துவிடுவது என்பழக்கம் இரண்டு மணி நேரம் உடம்பு வியர்வையில் குளிக்கும்வரை தேகப் பயிற்சி செய்வேன். இதற்குப் பிறகு படிப்பதுதான் என் பொழுதுபோக்கு"

"எங்களுக்கென்று ஒரு ரேடியோ இருக்கிறது. அதில் தென்னாபிரிக்க வானொலி நிகழ்ச்சிகளை மட்டும் கேட்கவே அனுமதி. மற்றப்படி தோட்ட வேலை செய்கிறேன். அதில் தக்காளி, அவரை, வெள்ளரிக்காய் என்று பலவகையும் பயிரிட்டு வளர்க்கிறோம்" என்றுதன்னுடைய நாட்களைக் கழிக்கும் விதத்தைக் குறிப்பிடுகிறார் மண்டெலா.

கதிர் மாணிக்கம்

# ★ ★ தொடர் கட்டுரை



# இந்துபோர்ட் இராசரத்தினம்
## காலமும் வாழ்வும்

## பரந்த பல்கலைக்கழகத்துக்கு பரிந்துரை

இலங்கை ஒரு பொன்னாடு என்பதைக் கிரேக்கர், உரோமர், சீனர் முதலானோர் அறிந்திருந்தனர். போத்துக்கேயர், ஒல்லாந்தர், பிரெஞ்சுக்காரர், டேனியர், ஆங்கிலேயர் இந்நாட்டைத் தம்நாடாக்கப் பெரிதும் விரும்பினர். ஆங்கிலேயர் இதனைத் தங்கள் குடியேற்ற நாடுகளுள் உயர்ந்த படியில் கணித்திருந்தனர்.

இலங்கையருள் தமிழர் தலையெடுத்திருந்த காலம் ஒரு பொற்காலம். இலங்கையருள் பொன் அருணாசலம் அவர்கள் இணையற்ற தலைவராய்ப் படிப்பு, பட்டம், பதவி முதலிய பல துறைகளில் முன்னோடியாய், வழி காட்டியாய் இருந்த காலம் ஒரு காலம். அருணி அருணி என்று எல்லோரும் அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றிய காலம் ஒரு காலம், அவரும் ஆழமானவர் பெரிய அறிவாளி, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமே பெரிதும் மதித்த மேதை பேராசிரியர் எட்வேட் காப்பென்ரர் கீழைத்தேய மெய்யியல் அறிந்து பெரு ஞானியாய் உருவாகக் காரணராய் இருந்தவர் அருணாசலம்.

இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வேண்டும் முற்றாய் முழுதாய் அமைந்த பல்கலைக்கழகம் வேண்டும் என்றெல்லாம் எங்கள் தேவைகளை வெள்ளைக்காரருக்கு எடுத்துக் கூறியவர் அருணி. வெள்ளைக்காரர் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியைப் பரீட்சார்த்தமாய் அமைத்த போது, அருணாசலம் அவர்கள் தாமது ஆயிரக் கணக்கான நூல்களை அன்பளிப்புச் செய்தவர். பல்கலைக்கழகம் நிறுவுவதற்காகப் பூர்வாங்க வேலைகளைக் கவனித்தற்குச் சபையை நிறுவியவரும் அவரே தான்.

பல்கலைக்கழகம் அமைவதற்கு இலங்கைக்குத் தகுதி போதாது என்று சில மன நோயாளர் எதிர்ப்புக் கூறி, ஒக்ஸ்போட் எங்கே, கேம்பிரிட்ஜ் எங்கே என்றெல்லாம் அவற்றை உயர்த்திப் பேசி நம்மைத் தாழ்த்திப் பேசியவரும் அன்று இருந்தார்கள். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலேயே உருவாய அருணாசலம் ஆங்கிலேயருக்கு அடிவருடிகளாய் இருக்க விரும்பவில்லை.

இங்கிலாந்தை நன்கறிந்த அவர், அங்கே நூறு மைல் சுற்று வட்டாரத்துள் ஐந்து பல்கலைக்கழகங்கள் இருந்தமையைச் சுட்டிக் காட்டினார். நமக்கு என்ன குறை என்று கேட்டார். இங்கிலாந்தில் பல்கலைக்கழகங்கள் அருகருகே அமைந்திருப்பதைச் சுட்டிக் காட்டினார். அவை யாவும் எமக்கு 7000 மைல் தூரத்துக்கப்பால் மொழி, மதம், கலை, கலாசாரம் முதலியவற்றால் வேறுபட்டு விளங்குவன என்றார். பாரத நாட்டில் சொந்தப் பல்கலைக்கழகங்கள் பெரும் பட்டங்களை வழங்குவதை எடுத்துக் காட்டாகக் காட்டினார் இலங்கையில் சட்டம், வைத்தியம், பொறியியல் முதலிய துறைகள் யாவும் அன்றி ஏன் இம் மூன்று துறைகளையும் ஓரிடத்திலே வழங்கவும், அந்த இடத்திலே கலைத்துறைகளையும் சேர்த்துக் கொள்ளவும் முடியாது என்று கேட்டார். அன்றி அக்காலத்தில் 200 இளைஞர் சட்டப்படிப்பிலும், 100 இளைஞர்கள் வைத்தியப்படிப்பிலும் 150 இளைஞர்கள் பொறியியல் துறையிலும் படித்தமை ஒரு பல்கலைக்கழகத்துக்குப் போதியதாக அமையவில்லையோ எனக் கேட்டார். அக் காலத்தில் 700 பிள்ளைகள் லண்டன் மற்றிக்குலேசன், கேம்பிரிட்ஜ் சீனியர் தேர்வுக்கு விண்ணப்பித்தமை படிப்பாற்றலுக்குப் போதாதோ என்று கேட்டார்.

இந்தியாவில் ஐம்பது ஆண்டுகளாக சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் பல்கலைக்கழகங்கள் நடைபெற்று வந்த முறையையும், அங்கெல்லாம் எங்கள் நாட்டவர் பட்டம் பெற்று வந்த திறமையையும் குறிப்பிட்டார். சென்னையில் முதன் முதல் பி.ஏ. தேர்வு நடைபெற்ற போது இருவரே சித்தி பெற்றார்கள் என்றும், அவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள் என்றும் அவர்கள் திறமைச்சித்தி பெற்றவர்கள் என்றும், சிறுப்பிட்டி வைரவநாதர் தாமோதரம்பிள்ளை அவர்களையும், சுதுமலை வைரவநாதர் விசுவநாதன் அவர்களையும் குறிப்பிட்டு வியந்தார். தமிழ்நாட்டில் அக்காலத்தில் அரசறிய அறிவுச் செங்கோல் செலுத்தியவர்கள் யாழ்ப்பாணத்தவரே என்பது இலக்கியவரலாறு.

இன்னும் பர்மா, தாய்லாந்து, கம்போடியா, சீனா, யப்பான் முதலிய நாடுகளிலிருந்து மாணுக்கர்சிலர் அவ்வப்போது உயர்தர வகுப்புக்கள் படிப்பதற்கு இலங்கைக்கு வந்த முறையில் பட்டப்படிப்புக்கும் வருவார்கள் என்றார். பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளுக்கு இங்கே உயர் பீடவசதியுண்டு என்றார். இன்னும் எத்தனையோ காரணங்கள் கூறிப்பேசி இலங்கை பல்கலைக்கழகம் அமைய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார்.

இவ்வாறாக 1927ஆம் ஆண்டளவில் இலங்கைப் பல்கலைக்கழகம் பற்றி ஆராய்ந்த நீதியரசர் அக்பார் குழுவினர் அதைக் கண்டியில் அமைக்கலாம் என்று தகவுரை எழுதிய அறிக்கையைச் சட்டசபையினர் விவாதித்த போது. அமைவிடம் பற்றிய விடயம் சிக்கலையுண்டாக்கியது அது கொழும்பில் அமைதல் நல்லது என்று சிலர் கருத்துத் தெரிவித்துப் பெருமளவில் விவாதத்தை நீடித்தனர்

அந்தச் சபையிலே நாவன்மை படைத்த நற்றமிழ்ப் பிரதிநிதிகள் பலர் இருந்தனர். இராசரத்தினம் அவர்கள் கல்கத்தா பல்கலைக்கழகத்தின் நடைமுறையை அனுபவத்தில் அறிந்தவராகையால், அவர் இலங்கைப் பல்கலைக்கழகம் ஒன்றாய் இருந்தாலும் அதன் வளாகங்கள் கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய மூவிடங்களிலும் அமையலாம் என்றும்; கொழும்பில் மேலைத்தேய மொழிகள் சட்டம், மருத்துவம், பொறியியல் முதலியவற்றின் பீடங்கள் அமையலாம் என்றும்; கண்டியில் விவசாயம், சிங்களம், பாளி, சமஸ்கிருதம் இசைத்துறை முதலியவற்றின் பீடங்கள் அமையலாம் என்றும்; யாழ்ப்பாணத்தில் தமிழ்த்துறை, கணிதம், விஞ்ஞானம் முதலியனவற்றின் பீடங்கள் அமையலாம் என்றும் பரந்த நோக்கில் பெருந்தன்மையாக எடுத்துரைத்தார்.

பல்கலைக்கழகம் ஓரினத்தவருக்கோ ஒரு பிரதேசத்துக்கோ பயன்தராமல் இலங்கையர் எல்லோருக்கும் பயன் தருவதாயமைதல் வேண்டும். இவ்வாறாயின் காலி நகரத்தையும் நாம் கருத்தில் கொள்ளல் வேண்டும் நண்பர் ஈ. டபிள்யு. பெரேரா அவர்கள் தேசிய மனப்பான்மையில் யாழ்ப்பாணத்தாரின் படிப்பாழத்தைப் பற்றி வியந்து கூறினார். நான் யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியின் பிரதிநிதியானாலும் இலங்கை முழுவதற்கும் பொதுவாக அமைந்த இந்த மண்டபத்தில் எல்லோருடைய நன்மையையே எடுத்துக் கூறல் வேண்டும்.

இன்று இலங்கையெங்கும் ஆங்கிலக் கல்வி சிறப்பிடம் பெற்று வருகின்றது. கொழும்பில் 92 பாடசாலைகளும், யாழ்ப்பாணத்தில் 52 பாடசாலைகளும், தென்னிலங்கையில் 52 பாடசாலைகளும் நல்லமுறையில் நிலவுகின்றன. எனவே நான் முன்னர் கூறிய முறையில் பரந்த முறையில் வளாகங்கள் அமைந்த ஒரு கூட்டுப் பல்கலைக்கழகமே இலங்கைக்குப் பொருத்தமானது.

பல்கலைக்கழகமே நாட்டின் உயர்ந்த கல்விக்கூடம். அதனை நாம் உடனடியாக ஆரம்பித்தல் வேண்டும். தேசாதிபதி அவர்களும் இதற்குச் சாதகமான மனப்பான்மையுள்ளவராயிருக்கிறார். என்றெல்லாம் எடுத்துக் கூறினார்.

அக்காலத்து வெள்ளையர் அரசாங்கம் மாகாணங்கள் தோறும் நடைபெற்று வந்த வேலைகளுக்கு நிதியொதுக்கிய போது, ஒருமுறை பகிரங்க சேவைப் பகுதிக்கான ஒதுக்கீடு வடமாகாணத்தின் திருத்த வேலைகளுக்குப் போதாமல் இருந்ததைச் சுட்டிக்காட்டி, சிங்களப் பிரதிநிதிகளின் ஆதரவையும் பெற்றுக் கூடுதலான ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொடுத்தார்.

இராசரத்தினம் அவர்கள் சட்டசபைப் பிரதிநிதியாயிருந்த காலத்தில் தம்மாலியன்றவரை மனச்சாட்சிக்கு மாறுபடா வண்ணம் சேவை செய்துள்ளார் என்பதைச் சட்டசபை அறிக்கைகள் சான்று பகரும். சமயம் வாய்த்த போதெல்லாம் இலங்கைத் தமிழரின் பெருங் குறைகளை எடுத்துக்காட்டிப்

**க.சி.குலரத்தினம்**

பேசியவர், என்றைக்காயினும் சிங்கள மக்களின் மனம் நோவப் பேசவில்லை. வெள்ளைக்காரரின் சட்டசபையின் போக்கைக் கண்டித்து, எத்தனைமுறைகள் திருத்தங்கள் செய்த போதிலும் தமிழர் முதலான சிறுபான்மையினரின் குறைகள் தீர்ந்தபாடில்லை என்று பேசினார்.

உத்தியோக பற்றற்ற பிரதிநிதிகள் சிங்களவராயினும் தமிழராயினும் எவ்வளவுதான் பேசினாலும் தேசாதிபதியும் அவரின் பக்கபலமாயிருந்த உத்தியோக அங்கத்தவரும் அரசாங்கத்தை ஆட்சி நடத்தி வந்த முறையை அசைக்க முடியாது போலும் என்று எடுத்துக் காட்டினார்.

இலங்கை அரசியற் பரிபாலன அமைப்பில் அடியத்திவாரப் பொறுப்பைத் தாங்கி நிலவிய சிவில் சேவையினருக்கான மதிப்புக்குரிய பரீட்சையும் நேர்முகப் பரீட்சையும் அக்காலத்தில் லண்டனிலேயே நடைபெற்றுவந்தமை இலங்கை பரீட்சார்த்திகளுக்கு எவ்வளவு தூரம் இடைஞ்சலாயிருந்தன என்றும், அவற்றை இலங்கையில் நடத்தவேண்டும் என்றும் வாதிட்டு எடுத்துக் காட்டினார். அரசாங்கம் இவ் வேண்டுகோளை முதலில் மறுத்த போதிலும் இராசரத்தினம் அவர்கள் விடாது விவாதித்துச் சிங்களச் சகோதரருக்கும் விடயத்தை விளக்கி, அவர் தம் ஆதரவையும் பெற்றுத் தம் சாதனையை நிலை நாட்டியுள்ளமையை அறிக்கைகள் பேசும்.

அறிவாளியும் தர்க்கரீதியாகப் பேசும் விவேகியுமான கௌரவ இராசரத்தினம் அன்று சுட்டிக் காட்டிய முப்பெரு நகரங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம் கண்டி என்பனவாம் இப்பெரு நகரங்களில் பல்கலைக்கழக வளாகங்கள் அமையலாம் என்பதைச் சிங்களவருள் திரி சிங்கள தானம் கோரியோர் கேட்டுத் தலையசைத்தனர். இன்னும் இலங்கை அரசியல் யாப்பைத் திருத்த வந்த டொனமூர்ப் பிரபு, நாதன் முதலானோர் முப்பெரு நகரங்களின் முக்கியத்துவத்தைப் புறக்கணிக்கத் துணியவில்லை தாங்கள் அமைத்துக் கொடுத்த அரசாங்க சபையின் வைகல்கள் (Sessions) காலந்தோறும் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய நகரங்களில் நடைபெறுதல் நல்லது எனத்தகவுரை எழுதினர். இது முப்பெரு நகரங்களை மையமாகக் கொண்டமையே ஒரு சமஸ்டிக்கு வழியாகும் எனச் சூசகமாக அறியவுள்ளது இச்சூசகத்தை உணர்ந்த ஏ பி ஜெயசூரியா அவர்கள் சமபல பிரதிநிதித்துவத்தை விட்டுச் சமஸ்டி கேளுங்கள் என்று எப்பவோ கூறியவர்.

## சைவாசிரியர் பற்றுக்குறை

ஆசிரியர் என்றால் பயிற்றப் பெற்ற ஆசிரியரையே மேலிடத்தார் கருதினர். அன்று கொழும்பில் தேஸ்ரன் வீதியில் ஆங்கில ஆசிரியர்க்கான பயிற்சிக் கல்லூரி அரசினரால் நடத்தப் பெற்றது. கம்பகாவில் துவிபாஷா பயிற்சிக் கல்லூரியில் ஆங்கிலமும் சிங்களமும் அல்லது தமிழும் பயிற்றப் பெற்றன. அவற்றைவிட சுயமொழிப் பயிற்சி பெரும்பாலும் புறமதத்தவரிடமே நிலவியது எனினும் கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அரசினர் தமிழ்ப் பயிற்சிக் கலாசாலைகள் இருந்தன

புறமதத்தவர் கலாசாலை வரிசையில் மட்டக்களப்பு அரசடி வெஸ்லி, யாழ்ப்பாணம் கொழும்புத்துறை கத்தோலிக்கம், யாழ்ப்பாணம் கத்தோலிக்கப் பெண்கள், நல்லூர் பெண்கள், மக்கோனா கத்தோலிக்க ஆண்கள் முசேயிலப் தனியார் பெண்கள், நீர்கொழும்பு கத்தோலிக்க கலவன், நிதம்புவ பௌத்த ஆண்கள், இணுவில் இராமநாதன் சைவப் பெண்கள், வலறை பௌத்த பெண்கள், பேராதனை கலவன், புளியந்தீவு கத்தோலிக்க ஆண்கள், வெள்ளப்புவ கத்தோலிக்க பெண்கள் என்னும் முறையில் ஆசிரியர்க்கான பயிற்சிக் கல்லூரிகள் நிலவின. கோப்பாயில் அறிஞர் பொன்னையா அவர்களின் தலைமையில் புகழ் பூத்த மகாலிங்கசிவம் முதலானோர் உதவியுடன் நல்ல முறையில் ஆண்கள் பயிற்றப் பெற்றனர். இவர்களுக்கு வெளிவாரி விரிவுரையாளராயிருந்தவர்களுள் சு. நடேசப்பிள்ளை, சு. இராசரத்தினம், அருள்நந்தி, பண்டிதர் நாகலிங்கம் குறிப்பிடத்தக்க பெரியார்களாவர்.

அக்காலத்தில் நிலவிய தமிழாசிரியர்க்கான பயிற்சிக் கலாசாலைகள் போதனாசக்தி வித்தியாலயங்கள் எனவே வழங்கி வந்தன அன்று நல்லூரில் நிலவிய பெண்கள் பயிற்சிக் கலாசாலை சேர்ச் மிசனைச் சேர்ந்தது. அங்கே திரு. குணநாயகம் தலைவராயிருந்தார். கொழும்புத்துறை ஆண்கள் கல்லூரியில் திருவாளர்கள் சவிரிமுத்து, பிலிப், தோமாஸ், பிரான்சிஸ் முதலானோர் விரிவுரையாளர்களாய் இருந்தார்கள். கன்னியர் மடத்துப் பெண்கள் பயிற்சியில் தோமாஸ் என்பவர் அதிபராயிருந்தார் வேப்படி வெஸ்லியன் மிசன் பயிற்சியில் சாள்ஸ் என்னும் பெரியார் அதிபராயிருந்தார். உடுவில் அமெரிக்க மிசனரிமாரின் பயிற்சியில் திரு. லைமன் அவர்களும் தெல்லிப்பழையில் யெறமையா முதலானோரும் இருந்தார்கள். இத்தனை பயிற்சிக் கல்லூரிகள் பயிற்சியளித்தும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வந்தது.

தமிழாசிரியர் பற்றாக்குறையை வெளியிட்ட 1928 ஆம் ஆண்டறிக்கையில் கல்விப்பணிப்பாளர் மக்கிறே தந்த தகவலில், அன்று உருவாய தமிழாசிரியர் அறுபத்து மூவர், ஆசிரியைகள், இருபத்தொன்பதின்மர் ஆசிரியத் தராதரம் பெற்ற ஆண்கள், இருபத்திருவர், பெண்கள் மூவர், தற்காலிக ஆசிரியர் தகுதியில் ஆண்கள் பதின்மர், பெண்கள் ஐவர் என அறியக் கிடக்கிறது.

இங்ஙனமாகத் தமிழாசிரியர் பற்றாக்குறை பொதுவாக நிலவிய வேளையில், துரித கதியில் வளர்ந்துவந்த சைவப் பாடசாலைகளில் சைவாசாரத்தோடு கற்பிக்கவல்லவர் தொகை மிகக் குறைவாகப் பெரும் பற்றாக்குறை நிலவியது இதைக்கண்ட இராசரத்தினம் அவர்கள், கல்விப் பணிப்பாளரிடம் மேலதிக ஆசிரியர்களைப் பயிற்றித் தருமாறு 1927 ஆம் ஆண்டிலேயே விண்ணப்பித்திருந்தார். கௌரவ இராசரத்தினம் அவர்கள் கோப்பாயில் வெளிவாரி விரிவுரையாளராயுமிருந்தவர்.

அன்று வட மாநிலத்தின் வித்தியாதரிசியாயிருந்தவர் திரு எச்.எஸ் பெரேரா என்னும் பெரியார். இவர் பெரிய மனோதத்துவ நிபுணரும், கல்விமானுமாவார். இவர் பிற்காலத்தில் அரசினர் ஆங்கில பயிற்சிக் கலாசாலை அதிபராயும், அதன் பின்னர் கல்விப்பணிப்பாளராயும் இருந்தவர் இவர் சைவப் பெரியார் புலோலி சிவபாதசுந்தரம் அவர்களின் நண்பராய்ச் சைவாசார சீலத்தைப் பெரிதும் விரும்பியவராயிருந்தவர் இவர் விடுமுறை பெற்றுப் போனபோதெல்லாம் நல்லூர் கந்தையா அவர்கள் பதில் தலைவராயிருந்தவர் கந்தையா அவர்கள் தலைப்பாகை உத்தரீயம், பதக்கஞ் சங்கிலி, சந்தனப் பொட்டு யாவும் அணிந்து சாத்துப்படிக்கந்தையா எனப் புகழ்பெற்றவர். அவர் கடும் சைவாசாரசீலர். கௌரவ இராசரத்தினம் அவர்களின் போக்கைப் பெரிதும் பாராட்டியவர். அவர் வட மாநிலத்துப் பாடசாலைகளை நன்கறிந்தவர். பிள்ளைகளின் படிப்பார்வத்தையும், பொது விவே

... 13 ஆம் பக்கம் பார்க்க

## இவ்வாரச் சிறப்புக் கட்டுரை

# வருவதை முன்னுணரும் வல்லமைமிக்க இலக்குவன்

**சி. நு. இராஜேந்திரன் பி. ஏ. எம். எட்**

"இலக்குவன் மகா கோபக்காரன். கோப வெறியினால் அறிவு மயங்கி நிதானத்தை இழப்பவன். அதனால் விபரீதமான செயல்களில் கூட இறங்கி விடும் சுபாவம் உடையவன்" என்றெல்லாம் அவனைப் பற்றி எண்ணுபவர் பலர் உளர். தாம் அவ்வாறு எண்ணுதற்குரிய சான்றுகள் பல காட்டி நிற்பர்.

இராமனைக் கைகேசி காட்டுக்கு அனுப்பி விட்டாள் என்பதைக் கேள்விப்பட்ட இலக்குவன் நெருப்பாகக் கனன்றான். "தனக்கு இராச்சியத்தைச் சம்பாதித்துக் கொண்டு இராமனுக்குக் காட்டைக் கொடுத்து விட்டாளாக்கும். இருக்கட்டும்" எனக் கைகேசியை வைதான். யுத்த சன்னத்தனானான். இவ்வாறு சுவாலையிட்டு எரிந்து கொண்டிருந்த அவனுடைய சினத்தீயை அவிக்க இராமன்படாத பாடுபட்டான்.

அடுத்து மற்றொரு நிகழ்ச்சி. இராமன் மீது சூர்ப்பனகை கொண்ட காதல் அவளைப் பெரிதும் வருத்தியது சீதை இருக்கும் வரை அவன் தன்னைத் தீண்டப் போவதில்லையென எண்ணியவளாய் அவளைத் தூக்கிக் கொண்டு போய் ஒளித்துவிட வேண்டுமென்று தீர்மானித்தாள். நினைத்ததை முடிக்க அவள் சீதைமீது பாய்ந்த வேளை இலக்குவன் கண்டுவிட்டான். சூர்ப்பனகையின் வேஷம் கலைந்து இயல்பாயிருந்த செம்பட்டை மயிரைத் திருகிப் பிடித்துக் கொண்டான். அவள் அவனைத் தாக்கிவிட்டுத் தப்பிவிட முயன்றாள். அவ்வளவுதான். இலக்குவனுக்குச் சினம் பொங்கி வழிந்தது. அவளது 'மூக்கும் காதும் வெம் முரண்முலைக் கண்களும் முறையால் போக்கி' தன் சினம் நீங்கப் பெறவே புரிகுழல் விட்டான்.

### கம்பர் சித்திரிக்கும் இலக்குவன்

கவிச்சக்கரவர்த்தி கம்பர் இலக்குவனை வெறும் கோபக்காரனாகச் சித்திரிக்கவில்லை. நிதானத்துடன் சிந்தித்துச் செயலாற்றும் ஓர் அற்புத கதாபாத்திரமாகச் சிருட்டித்துள்ளார். அவன் அறிவும் ஆற்றலும் தீர்க்க தரிசனமும் உடையவன் என்பது பல சந்தர்ப்பங்களில் துலக்கமாக வெளிப்படுகின்றது. மூக்கறுபட்ட சூர்ப்பனகையின் முறையீட்டைக் கேட்ட இராவணன் அவமானத்தால் மனம் புழுங்கினான். அதே வேளை சூர்ப்பனகையின் வாயிலாகச் சீதையின் அழகைக் கேட்ட அவனிடம் காதல் வெறி விடம் போல் ஏறியது வஞ்சனையால் பழி தீர்த்திடவும் சீதையைக் கவருவதற்கும் உபாயம் செய்தான்.

மாமன் மாரீசனை மான் வேடத்தில் சீதையிருந்த இடத்திற்கு ஏகும்படி பணித்தான். இது ஆபத்தான காரியம் என்று தெரிந்தும் மாரீசன் பொன் மானாக பொய் மானாக சீதை தங்கியிருந்த பர்ணசாலை முன்சென்று நின்றான். மானைக்கண்டதும் சீதைக்கு அதன் மீது அபார ஆசை உண்டாகியது. அதைப் பிடித்துத் தரும்படி அவள் இராமனிடம் கேட்டாள். இராமனும் அதற்கிசைந்து புறப்படத்தயாரானான். அது மாயமான் என்பதை சிந்தித்துப்பார்க்கவில்லை. சீதையின் வேண்டுகோளை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பினானேயொழிய அதனால் தமக்கு வரக்கூடிய இடர்கள் பற்றி எள்ளளவும் அவன் சிந்தித்துப்பார்க்கவில்லை. இவ்விடத்தில்தான் கம்பராழ்வார் இலக்குவனை ஒரு மாறுபட்ட கதாபாத்திரமாக வடித்துள்ளார்.

### இலக்குவன் நிதானம்

இலக்குவன் எவ்விதக்கலக்கமுமின்றி நிதானத்துடன் சிந்தித்துப் பார்த்தான். அவனுக்கு உண்டாகிய சந்தேகத்தை இராமனுக்கு உடன் வெளிக்காட்டத் தவறவில்லை. "எண்ணித் துணிக கருமம்" தன் அண்ணனுக்கு அறிவுரை பகன்றான்

> அடுத்தன எண்ணிச் செய்தல்
> அண்ணலே! அமைதி அன்றே;
> விடுத்திதன் பின்நின்றார்கள்
> பலருளர் எனினும் வில்லால்த்
> தொடுத்த வெம்பகழிதூவித்
> தொடர்ந்தனென் விரைந்து சென்று
> படுக்குவன், அது அன்றாயின்
> பற்றினென் கொணர்வென்'' என்றான்.

மானை முன்னே அனுப்பி பின்னே பகைவர் பலர் நிற்க வேண்டுமென இலக்குவன் எச்சரித்தான் இராமன் மானைப் பிடிக்கச் செல்வதால் ஏற்படக் கூடிய விபரீதங்களை உணர்ந்த அவன் அதனைப்பற்றி வருவேன் எனத் தானே தயாரானான். ஆனால் விதி யாரைத் தான்விட்டது? சீதையை மகிழ்விப்பதற்காக மானைப் பிடிக்க இராமனே புறப்பட்டான். தம்பி இலக்குவனால் அவனைத் தடுக்கமுடியவில்லை. இலக்குவனால் அவனை மேலும் எச்சரிப்பதைத்தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை.

> "முன்னவன் மகவாய் வந்த
> மூவரின் ஒருவன்போனான்;
> அன்னமாரீசன் என்றே
> அயிர்த்தனென் இதனை
> ஐய . . "

என்று இலக்குவன் கூறினான். மான் வேடத்தில் வந்திருப்பவன் விசுவாமித்திரரின் யாகத்தின்போதுதப்பிப்போன மாரீசன் என்னும் அரக்கனே என்று தன் சந்தேகத்தைப் புலப்படுத்தினான். இராமனுக்கே புரியாத விடயம் இலக்குவனுக்குத் தெளிவாகப் புரிந்தது. அவன் எச்சரித்ததில் நியாயமுண்டென்பதை இனித்தான் இராமன் உணர்ந்து கொள்ளப் போகின்றான்.

### இராமன் பாராட்டு

இராமனுடைய அம்புபட்டு மாரீசன் தன் சுயரூபத்தோடு பூமியில் விழுந்ததைப் பார்த்த இராமன் தனக்குள் கூறிய வார்த்தைகள் இலக்குவனின் அறிவாற்றலுக்குக் கட்டியம் கூறுகின்றன. இராமனே இலக்குவன் சிறந்த அறிவாளி எனப் பாராட்டுகின்றான்.

> "..ஐயன் வல்லன் என்
> ஆருயிர் வல்லன் நான்
> உய்யவந்தவன் வல்லவன்"

என்று உன்னினான்.

இராமனின் அம்பு பட்டதும் மாரீசன் மாயவித்தையினால் இராமனுடைய குரலிலேயே வாய்விட்டு அரற்றினான். இலக்குவன் இதனால் ஏமாறமாட்டான் என்பது இராமனுக்கு நன்றாகத் தெரியும். அந் நம்பிக்கை வீண் போகாதவாறே இலக்குவன் நடந்து கொண்டான். சீதை இராமனுக்குத்தான் ஏதோ ஆபத்து ஏற்பட்டு விட்டதென்று கலங்கி நின்ற வேளையில் அது மாரீசன் செய்த மாயச் செயலென ஆறுதல் மொழிந்தான், எவ்வளவு இக்கட்டான நிலையிலும் கூட இலககுவன் நிதானத்தை இழககவில்லை சீதையே 'கதிகலங்கிப்' போயிருந்த அவ்வேளையில் எவ்வித கலக்கமுமின்றி தெளிந்த சிந்தனையோடு

> "பரக்கப் பகர்வது
> பகழி பண்ணவன்
> துரக்க அந்த அதுபடத்
> தொலைந்து சோர்கின்ற
> அரக்கன் அவ்வுரை எடுத்து
> அரற்றினன் அதற்கு
> இரக்கமுற்று இரங்கலிர்
> இருத்திர் ஈண்டு'' என்றான்.

இராமனின் அம்புபட்ட வேதனையால் அரக்கனாகிய மாரீசனே அவ்வாறு புலம்பலுற்றான் என்று கூறி சீதாபிராட்டியை அமைதியாக இருக்கும்படி வேண்டினான் இதைவிட இலக்குவனின் அறிவு ஆற்றலுக்குச் சான்று வேண்டுமா? என்றாலும் இலக்குவனின் இவ் வார்த்தைகள் அவளைத்திருப்திப்படுத்தவில்லை. மாறாகக்கோபாவேசத்தினால் அறிவு கலங்கிபநிலையில் "இலக்குமணா! ஒரு நாள் பழகினும் அன்பு ஏற்பட்டு அதற்காக உயிரை விடுவார்களே! இராமனுடைய ஆபத்து நிலை கண்டு இரக்கமில்லாதவனாய் நிற்கிறாய் சரிசரி வேறு என்ன எண்ணங்கிடக்கிறது? எரியில் வீழ்ந்து உயிரை மாய்த்துக்கொள்வேன்'' என்றுகூறியபடி நெருப்பை நோக்கி ஓடினாள் இலக்குவன் சீதையைத் தடுத்து அவளைச் சமாதானப்

...12 ஆம் பக்கம் பார்க்க

---

## நூலகம்

# சாந்தனின் இன்னொரு வெண்ணிரவு

**கலாநிதி சோ.கிருஷ்ணராஜா**

சாந்தனது சிறுகதைகளை வாசிக்குமொருவர் சிறுகதைகளிற்கு இலக்கணம் உண்டா? சிறுகதை வரைவிலக்கணத்திற்கு அவை உட்பட்டுள்ளனவா? என்பது போன்ற வினாக்கள் சிலவற்றை எழுப்புவது இயல்பானதே. இலக்கியத்திறகு இலக்கணமா! இலக்கணத்திற்கு இலக்கியமா என்ற பாரம்பரிய வாதப் பிரதி வாதம் ஒன்றும் உண்டு. பாடசாலை நூல்களிலோ அன்றி பல்கலைக்கழக ஆசிரியர்களின் விரிவுரைகளிலோ ஒரு வேளை நாம் சிறுகதைகளின் இலக்கணத்தை தேடிககண்டு பிடிக்கலாம். ஆனால் சிறுகதைகளைமதிப்பிடும் விமர்சன முயற்சிகளிற்கு வரைவிலக்கணங்கள் அதிகம் கைகொடுப்பதில்லை. இன்னொரு வெண்ணிரவு சிறுகதைத் தொகுதியில் உள்ளசிறுகதைகளைப் பொறுத்தவரையில் மேற் குறித்த கருத்துக்களை மனங்கொள்வது தகும்.

நீண்ட நாட்களிற்கு பின்பு சாந்தனது ஐந்தாவது சிறுகதைத் தொகுதியான இன்னொரு வெண்ணிரவு வெண்புறா வெளியீடாக வந்துள்ளது. இச் சிறுகதைத் தொகுதியில் பதின்னான்கு சிறுகதைகள் உள்ளது. அவற்றில் எட்டுக் கதைகள் மல்லிகையிலும் மிகுதி சிரித்திரன், கணையாழி, அமிர்தகங்கை, ஈழமுரசு என்பனவற்றில் ஏலவே வெளிவந்தவை. இக்கதைகள் அனைத்தையும் ஒட்டு மொத்தமாக நோக்கும் பொழுதுசாந்தனதுசிறுகதைப் பாணியை, அவரது யாத்தல் முறைமையினை நாம் மீண்டுமொருமுறை உறுதி செய்யக் கூடியதாயிருக்கிறது

தற்கால தமிழ்ச் சிறுகதையாசிரியர்களிடையே தனக்கென்ற தனித்துவம் ஒன்றைப் பேணுவதில் துலக்கமாக தெரிபவர்கள் வெகு சிலர்மட்டுமே இவ்வகையில் சிறுகதைகளின் உருவம், உள்ளடகக அமைப்பு, உத்தி என்பவற்றைக் கையாழுவதில் ஈழத்தில் ஒரு தனியான சிறப்பிடத்தைப் பெறுபவர் சாந்தன். இத்தனித்துவமே "இன்னொரு வெண்ணிரவு" என்ற இச் சிறுகதைத் தொகுதிக்கான விமர்சனத்தை அவரது அனைத்து சிறுகதைகளிற்கும் பொருந்துவதாக அமைத்துக் கொள்வதற்கு இடம்தருகிறது.

சாந்தனது சிறுகதையின் தனித்துவம என்ன? ஏனைய எமது எழுத்தாளர்களிலிருந்து அவர் எவ்வகையில் வேறுபடுகின்றார்?

சாந்தனது சிறுகதைகளை வாசிக்கும் பொழுது அவை மிகவும் இயல்பானதாக, எமது சொந்த அனுபவங்களையே நினைவு கூருவது போன்றதொரு நிலை ஏற்படுகின்றது சாந்தனது அனுபவம் அதற்கேயுரிய கால உணர்வுடன் சிறுகதையாக சுவைஞருக்குத் தரப்படுகிறது. கலை இலக்கியங்களில் குறிப்பாக நாவல்களிலும், சிறுகதைகளிலும் காணப்படும் யதார்த்தப் பண்பு கால உணர்வைப்பேணுவதால் மட்டுமே பெறப்படும் ஒன்றாகும் இன்னொரு வெண்ணிரவு சிறுகதைத் தொகுதியில் இடம்பெறும் எட்டியது, ஏன், உலகங்கள், யுகங்கள் போன்ற சிறுகதைகளில் கால உணர்வு மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுகதை இலக்கியங்களின் யதார்த்தப் பண்பைப் பேணும் பிறிதொரு அம்சம் களம் அல்லது சம்பவம் நிகழ் இடம் என்பதாகும். சமகால ஈழத்து எழுத்தாளர்களில் தெணியான், டானியல் அன்ரனி, சாந்தன் ஆகியோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள். சரியான களத்தெரிவு இல்லாத பொழுது சிறுகதைகள் செயற்கையானதாகப் போய் விடும் அபாயம் உண்டு. உதாரணத்திற்கு இலங்கை எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் வெளியிட்ட சிறுகதைத் தொகுதிகளை எடுத்துக் காட்டலாம். சாந்தனது சிறுகதைகளில் செயற்கைத் தன்மையற்ற, பாங்கை சுவைஞர்களினால் உணரக் கூடியதாயிருப்பதற்கு அவரது சிறப்பான களத்தெரிவும் ஒரு முக்கிய காரணியாகிறது. 'ஏன்' என்ற சிறுகதையை உதாரணத்திற்குக் கூறலாம்

இன்னொரு வெண்ணிரவு சிறுகதைத் தொகுதியை நிதானமாக மீண்டும், மீண்டும் வாசிக்கும் பொழுது (பெரும்பாலான ஈழத்துச் சிறுகதைகளை இவ்வாறு வாசிக்க முடிவதில்லை) சாந்தனின் படைப்பு நுட்பத்தின் பிறிதொரு முக்கிய பண்பு துலக்கமாகத் தெரியவரும். கலை இலக்கியங்கள் கலைஞனிடமிருந்து சில செய்திகளைச் சுமந்து வருகின்றன. கலைஞன் தன் படைப்பிற் கூடாகச் சொல்ல விரும்பும் இச் செய்தியைப் பெறுவதில் நுகர்வோன் எப்பொழுதும் அக்கறை கொள்வதில்லை. சரியான உத்தி முறைகளைக் கையாளுவதன் மூலம் சிறுகதையாசிரியர்கள் தன் செய்தியின் பால் சுவைஞனின் கவனத்தை ஈர்க்கலாம். சாந்தன் இவ்வகையில் குறிப்பிடத்தக்கதொரு சிறுகதையாசிரியன். எளிமையான உத்திகளைக் கையாளுவதன் மூலம் அனைத்துத் தரத்திலுமுள்ள வாசகர்களைத் தன்பால் ஈர்ப்பதில் சாந்தன் வல்லவராயிருக்கிறார். சமகால கலைஞர்கள் பலருக்கு இது கைவராத ஒன்று. ஒரு சிலரின் ரசனைக்கென்று உற்பத்தி செய்யப்படும் விலையுயர்ந்த நூல்கள்(?) பரவலான ஆதரவைப் பெறத் தவறிவிடுகிறது. இறுதியில் உண்மையான சிறுகதை இலக்கியங்கள் கனமானவை. அவை எல்லோராலும் இரசிக்க முடியாதவை என்ற போலியான விரங்கள் ஏற்பட அவை காரணமாக அமைகின்றன.

நாம் இன்று வாழும் யுகம் "உயர்ந்தோர்க்கான உயர்தனி இலக்கியங்கள்" தோன்றக்கூடிய காலமல்ல. நமது கல்வியில் வந்து புகுந்து கொண்ட ஜனநாயக மரபு உயர்ந்தோர்க்கான உயர்தனி இலக்கியங்களையும் கூட மக்கள் மயப்படுத்தும் பணியினை மேற்கொண்டுள்ளது நிகழ்கால இலக்கிய வரலாற்றில் உயர்தனி கலை இலக்கியக் கோட்பாடுகளிற்கும் அவற்றினை நியாயப்படுத்தும் வாதப் பிரதி வாதங்களிற்கும் இடமில்லை.

சாந்தனது சிறுகதை உத்திகள் சுவையினை சோர்வடையச் செய்வனவோ அன்றி சலிப்படையச் செய்வனவோ அல்ல. உவமானம், நிகழ்ச்சி. விபரிப்பு, நினைப்பு என்பன போன்ற எளிமையான உத்திகள் மூலம் இன்னொரு வெண்ணிரவு சிறுகதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன உலகங்கள், வாழ்க்கை, இடைவெளி போன்ற சிறுகதைகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

இன்னொரு வெண்ணிரவு என்ற சிறுகதைத் தொகுதி மட்டுமல்ல, சாந்தனது எல்லாச் சிறுகதைத் தொகுதிகளிலும் மேற்குறித்த பண்புகள் பரவலாகக் காணப்படுவதை பரிச்சயமுடைய வாசகர் அறிவர். இதுவே ஒரு கலைஞன் என்ற வகையில் சாந்தனது பலமாகும். இன்னொரு வெண்ணிரவு இதனை மீண்டும் உறுதிசெய்கிறது.

# பேராசிரியர் சந்திரசேகரம் அளித்த

# மரபும் மாற்றமும் இணைந்த கல்வி நெறி

மனித இனம் மனிதப்பண்பினைப் பெற்றுக் கொள்ள உதவுவது கல்வி. வாழ்க்கையை வளமான தாக்கவும், எதிர் காலத்தை உணர்ந்து ஏற்ற ஆயத்தங்களைச் செய்யவும் விரும்பும் ஒவ்வொருவருக்கும் கல்வியே மிகச் சிறந்த துணையாக விளங்குகின்றது. இதனுலேயே "வாழ்க்கைக்கு உறுதுணையாய் வருவது தூய நற்கல்வி" என்ருர் திருமூலர். கற்க மறுப்பவன் வாழ மறுக்கிருன் என்ற கூற்றும் ஈண்டு நோக்கற்பாலது. பண்டு தொட்டுத் தமிழினம் கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்து. கல்விமூலம் அதன் பண்பாட்டினையும், தனித்துவத்தையும் வளர்த்து வருகின்றது. சான்ருேர்கள் கொண்ட கல்விச் சமுதாயத்தினை உருவாக்குதலே தமிழ் மக்களின் கல்வி நோக்கங்களுட் தலையாயதாக உள்ளது. இத்தகைய தமிழ் கல்விமரபு சங்ககாலந் தொடக்கம் நாவலர் பெருமான், விபுலானந்த அடிகள் காலம்வரை வளர்ந்து வந்துள்ளது. இந்த வரிசையில் நமது கல்வி மரபினை ஆய்ந்து, அதன் பண்புகளுக்கு விமர்சனம் தந்து, அதன் அடிப்படையில் எழுகின்ற புதுக் கருத்துக்களை வளர்வு பெறுகின்ற தற்கால நவீன சமூகத்திற்கு ஏற்ப உருவாக்கி அளிக்கும் முயற்சிகளில் அயராது ஈடுபாடு கொண்டு விளங்கியவர் மறைந்த கல்விமாமேதை பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள்.

கல்வியிலே பழைமையும் புதுமையும் ஒன்றிக்க வேண்டும்; மரபும் வேண்டும் மாற்றமும் வேண்டும் என்ற கொள்கையினையுடையராய் சிறந்த கல்வித் தத்துவக் கருத்துக்களைத் தெளிவாகவும் உறுதியுடனும் நமக்கு அளித்தவர் பேராசிரியர்.

இந்த நூற்ருண்டில் நம் மத்தியில் வாழ்ந்து பெருந் துணிச்சலுடனும், தீர்க்க தரிசனத்துடனும் கல்விச் சிந்தனைகளை வாரி வழங்கினுர். கல்விக் கருத்துக்களைக் காய்தல் உவத்தலின்றி விமர்சனம் செய்தார், கல்வி பற்றிய சிந்தனைகளையும், கோட்பாடுகளையும் மனிதகுல மேம்பாட்டிற்கு ஏற்றனவாக ஆக்கித் தருபவர்கள் கல்வித் தத்துவஞானிகள். இந்தவகையில், பேராசிரியர் ப. சந்திரசேகரம் இந்த நூற்ருண்டின் தலைசிறந்த கல்வித் தத்துவஞானிகளுள் ஒருவராக விளங்குகிருர். ஈழத்துக் கல்விச் சிந்தனைச் சுடர்மணிகளான நாவலர் பெருமான், விபுலானந்த அடிகள் ஆகியோரைத் தொடர்ந்து அந்த வரிசையில் இடம்பெற்றவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம் என்ருல் அது மிகையான கூற்று அன்று.

கிழக்கிலங்கையிலுள்ள மண்டூர்ப் பதியில், நல்லாசிரியராக விளங்கிய திரு. பதத்க்குட்டி என்பவருக்கு இளைய புதல்வனுக திரு. சந்திரசேகரம் 17-07-1926 இல் பிறந்தார். மண்டூர் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை, திருகோணமலை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றில் தமது ஆரம்ப, இடைநிலைக் கல்வியைக் கற்று, உயர்கல்வியை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பெற்று 1951 இல் பட்டதாரி ஆனுர். தமது வாழ்க்கைத் தொழிலாக ஆசிரியப் பணியை விரும்பி ஏற்று மட்டக்களப்பு சிவானந்தாக் கல்லூரியிலும், சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் சிறப்பாக்க கடமையாற்றினுர். 1691 முதல் பேராதனை, கொழும்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் கல்வியியற்றுறை விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும், 12-11-1987இல் அமரராகும் வரை அயராது பணிபுரிந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியற்புலம் அமைக்கப்படுவதற்குப் பேராசிரியரின் பங்களிப்பு மிகப் பெரியது. அதன் தலைவராகவும், பேராசிரியராகவும்

**கு. சோமசுந்தரம் எம்.ஏ**

இருந்த ஏழு ஆண்டுக் காலத்தில் பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ்களைப் பெற்ற பலருடன் 23 கல்வி முதுகலைமாணிகளையும் ஒரு கல்விக் கலாநிதியையும் ஆக்கிச் சாதனை புரிந்தமை பெருமை தரும் நிகழ்வாகும். மதுரை காமராசர் பல்கலைக் கழகம், கேரளப் பல்கலைக் கழகம், இந்திய காந்திகிராம் பல்கலைக்கழகம், இலண்டன் பல்கலைக்கழகம் என்பன இவரை அதிதிப் பேராசிரியராகவும், வருகைதரும் பேராசிரியராகவும் நியமித்தமை அவரின் கல்விச் சிறப்பிற்கு மேலும் மெருகூட்டுகின்றது. இவரது சீரிய கல்விக் கருத்துக்களையும், சிந்தனைகளையும் கௌரவித்து இலங்கைத் தேசிய கல்விக்கழகம், பிரித்தானிய ஒப்பீட்டுக் கல்விக் கழகம், அவுஸ்த்திரேலிய கல்வி நிருவாகக் கழகம் என்பன அவரை உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டன. உலகின் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் பல அனைத்துலகக் கல்வி அறிஞர்கள் வரிசையில் இவரையும் இடம்பெறச் செய்துள்ளன.

ஸ்ரீ இராமகிருஷ்ண குருதேவர், சுவாமி விவேகானந்தர், நாவலர் பெருமான், விபுலானந்த அடிகள் ஆகியோரின் வாழ்வும், வாக்கும், தொண்டும் இளமையிலிருந்தே இவரை ஆட்கொள்ளத் தொடங்கின. இந்து நெறியில் பக்தியும், தமிழ்ப்பற்றும், சமதர்மநோக்கும், சமரச சன்மார்க்கப் போக்கும் இவரின் வாழ்விலும், சிந்தனை வெளிப்பாடுகளிலும் காணக் கூடியனவாக இருந்தன. மாபெரும் தத்துவ ஞானிகளான சோக்கிறற்றீஸ், பிளேற்ருே, கார்ல் மாக்ஸ், ரூசோ, றசல் மகாத்மாகாந்தி, தாகூர் ஆகியோரின் கல்வித் தத்துவங்கள் பேராசியரின் கல்விச் சிந்தனைகளுக்கு உரமும் வலுவும் ஊட்டின. வேதாந்த சைவசித்தாந்த ஆத்மீகப் பண்புகள் இவரின் கல்விச் சிந்தனைகளுக்கு தளம் அமைத்துக் கொடுத்தன

பேராசிரியர் தாம் பிறந்த கிழக்கிலங்கையில் பந்தமும், புகுந்த வடக்கிலங்கையில் பாசமும் கொண்டவர் கல்வி கலாசார பண்பாட்டு ரீதியில் இரண்டையும் ஒன்ருகவே கண்டவர்.

தாம் உண்மை என்று கொண்ட கருத்துக்களை எக்காரணம் கொண்டும். எவரின் வற்புறுத்தலின் பேரிலும் விட்டுக் கொடுக்காத உளப் பண்பும், உறுதியும், வீரமும் கொண்டு சுதந்திர புருடராகத் திகழ்ந்தார். இதற்கு அவரிடம் காணப்பட்ட தெளிந்த நல்லறிவே காரணமாகும். உள்ளத்து நேர்மை உலக உடன்பாட்டிற்காகத் தியாகம் செய்யப்படல் ஆகாது என்பது கிரேக்க தத்துவஞானி சோக்கிறற்றீஸ் அளித்த மகுடவாசம். பேராசிரியர் இதற்கு இலக்கியமாக வாழ்ந்தார்.

"கொண்ட கொள்கையை விடாமன உறுதியாற்
காலநிதியாகும் வாய்ப்பையும் துறந்த
உம் தியாகத்தை எண்ணிச் சிலிர்ததேன்
இந்த உறுதி எவர்க்குத் தான் வரும்?"

எனப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவருக்குப் புகழாரம் சூட்டுவது வெறும் புகழ்ச்சிக்காக அல்ல; அத்தனையும் உண்மை.

பேராசிரியரின் கல்விச் சிந்தனைகள் பற்றி ஈண்டு நோக்குவோம்.

## கல்வியின் வரையறை

கல்வி என்பது ஆய்தல் அல்லது ஆய்வு. கல்வி நெறி மூலம் நாம் நம்மை, நம்சூழலை, அறிவினை, சமூகத்தை, பண்பாட்டு மரபினை ஆய்ந்து, இப்பண்புகளுக்கு விமரிசனம் தந்து அதன் அடிப்படையில் எழுகின்ற புதுக்கருத்துக்களை, வளர்வு பெறுகின்ற தற்கால நவீன சமூகத்திற்கு ஏற்ப உருவாக்க எத்தனிக்கின்ருேம். பேராசிரியரின் இக்கருத்து, அவரின் பழைமையில் பற்று வைக்கும் பண்பையும், புதுமையில் கருத்தைச் செலுத்தும் முற்போக்கு நிலையினையும் எடுத்துக்காட்டுகின்றது.

பழைமை என்பது பிற்போக்கு அல்ல; அது பின்னேக்கு என்பது அவரின் கருத்து. இப்பின்னேக்கு முற்போக்குக்கு முரணனதல்ல. மாருக, புதுமை பொங்கி எழுதுவதற்கு அடித்தளமாக அமைகின்றது. கல்வியில் பழைமை, புதுமை எனும் போது, மரபு பேணப்படும் அதேவேளை மாற்றங்களுக்கும் இடமளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் கல்வியில் வளர்ச்சியையும், விருத்தியையும் காண முடியும்.

கல்வி என்பது பண்பாடு எனக்கூறும் பேராசிரியர், கல்வியை ஊடகமாகக் கொண்டு பண்பாட்டினை உருவாக்குதல் வேண்டும் என்பர். பண்பாடு அறிவு வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது அறிவு வளர்ச்சியை ஏற்படுத்துவது கல்வி. கல்விக்குப் பயன் அறிவு; அறிவிற்குப் பயன் ஒழுக்கம் என்பது நாவலர் கருத்து. ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று, கல்விக்குக் கற்றல், கற்றங்கு ஒழுகல் ஆகியன விளங்குகின்றன. கற்றலும், நிற்றலும் இணையும் போதே கல்வி முழுமை பெறுகின்றது என்பர் பேராசிரியர்.

## கல்வியின் நோக்கங்கள்:

உலகியல் சார்ந்ததாகவும், ஆத்மீகம் தழுவியதாகவும் கல்வியின் நோக்கங்கள் அமையவேண்டும் என்பது பேராசிரியரின் கருத்து. வாழ்க்கை நோக்கங்கள், வாழ்க்கை விழுமியங்கள், நமது பாரம்பரியங்கள், ஆத்மீகம் ஆகியவற்றினை உள்ளடக்கிக் கல்வி நோக்கங்கள் திகழவேண்டும். நாம் வாழுகின்ற யுகம் ஆத்மீக வளத்தினையும், அறிவியல் வளத்தினையும் இணைக்கின்ற யுகம். ஆகவே உலகின் அன்ருட அறிவையும், ஆத்மீக அறிவையும் பெற்ற பூரணத்துவமுள்ள நிறை மனிதனை உருவாக்குவதைக் கல்வி நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். இத்தகைய நிறை மனிதனையே பண்டைத் தமிழர்கள் "சான்ருேன்" என்றனர். மனத்தினுல், மொழியினுல், செயலினுல் தூய்மையுடையவர்களே சான்ருேர்கள். கல்வி மூலம் சான்ருேர்கள் கொண்ட சமுதாயம் உருவாக்கப்படவேண்டும் என்று பேராசிரியர் வலியுறுத்தினுர்.

ஒவ்வொரு மனிதனும் தன்னையறிதல் வேண்டும். தன்னையறிதல் தன்னிறைவு பெறுவதற்கு அவசியம். தன்னை அறிவதன் மூலம் தம்மில் உள்ள நிறைவுகளை உணர்ந்து குறைகளைக்கண்டு களைந்து, நிறைவுகளை மதிப்பிட்டு மேலும் நிறைவுபெறச் செய்ய வேண்டும். இவ்வாறு மனிதப் பண்பினை மனிதன் பெற, அதற்கு விளக்கம் கொடுக்கக் கல்வி துணைபுரிய வேண்டும். இந்துமதம் தன்னிறைவு பெறல் என்று இதனைக் கூறுகின்றது. சோக்கிறற்றீஸ் தொடக்கம் உலகத்தத்துவ மேதைகள் யாவரும் ஏற்றுக்கொண்ட இக் கருத்து நமது காலத்திற்தும் பொருத்தமாக இருக்கும் பாங்கு கொண்டுள்ளதென்று சுட்டிக்காட்டியுள்ளார் பேராசிரியர்.

மனிதனின் உள்சார்ந்த சக்தியைக் கல்லுதல் மூலம் பண்படுத்தப்பட்ட பல்துறைத் திறன்களாகவும், ஆற்றல்களாகவும் வெளிக்கொணர உதவுகின்ற செயன்முறையே கல்வி. கல்வியின் நோக்கங்கள் மனிதனையே மையமாகக் கொண்டவை. மனிதனை அறியாமையிலிருந்து அறிவிற்கு இட்டுச்செல்வதே கல்வியின் நோக்கம் ஆகும் என்று பேராசிரியர் கூறுவார். கல்வியானது மக்களின் பண்புகளையும் ஆற்றல்களையும் உயர்த்தி வளர்ப்பதன் மூலம் அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு உதவுகின்றது.

கல்வி அறிவியலடிப்படையில் அமைந்து அத்தோடு பாரம்பரியப் பண்பினுடனும்,

...12 பக்கம் பார்க்க

# பெரும் பயன் நல்கும்

# மூலிகைகள்

**டாக்டர் செல்வி க. சிவநர்ஜினி**

### அறுகம்புல்

புதுமணத் தம்பதிகளை வாழ்த்தும் போது "ஆல்போல் தழைத்து அறுகுபோல் வாழ்க" என்று வாழ்த்துவார்கள். அறுகம்புல் சாதாரணமாகக் கிணற்றடியிலும், வளவுகளிலும், தோட்டங்களிலும் காணக்கூடியதாக உள்ளது மிக எளிதிற் கிடைக்கக் கூடிய இது பெரும் பயன் கொண்டதாகும்.

சைவ சமயத்துக்கும், அறுகம்புல்லுக்கும் பெரும் தொடர்பு உண்டு. மங்கல வைபவங்களின் போது பிள்ளையார் பிடித்து அறுகம்புல் சாத்துவார்கள். திருமணம் முதலிய மங்கல நீராட்டின் போதும் பாலும், அறுகும் சேர்த்து நீராட்டுவர்.

அறுகம்புல்லில் அற்புதமான சக்தி அமைந்துள்ளது. வைத்திய ரீதியில் விஷத்தைத் தீர்ப்பதற்கும் உடலுக்கு ஊட்டச்சத்து வழங்குவதற்கும் இது முக்கியமானது.

அறுகம்புல்லின் இளம் தளிர்களை நன்ருகச் சுத்தம் செய்து பாலில் காய்ச்சிக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் குழந்தைகளுக்கு எவ்வித நோயும் ஏற்படாது. இருதய பலவீன முற்ற முதியவர்கள் நீரில் அவித்துக் குடித்தால் சுகம் அடைவார்கள் அறுகம்புல்லை வெட்டுக் காயத்திற்கு அரைத்துக் கட்டினுல் காயம் விரைவில் ஆறிவிடும்.

### குப்பைமேனி

குப்பைமேனி ஓர் அதிசயமான செடி. இது குப்பை மேடுகளில் அதிக அளவில் காணப்படும். குழந்தைக்குக் கபக்கட்டு வேதனை கொடுக்கும்போது குழந்தை மூச்சுவிடத் திணறும்பொழுது குப்பைமேனிச் சாற்றைக் கொடுத்து வாந்தி எடுக்கச் செய்தால் குழந்தை விரைவில் குணமடையும்.

நெருப்புச் சுட்ட காயத்திற்கும் குப்பைமேனிச் சாற்றைத் தேனுடன் கலந்து பூசினுல் காயம் ஆறும். விஷக்கடிகளுக்கு இச் சாற்றுடன் சுண்ணும்பு கலந்து பூசினுல் அல்லது தேசிக்காய் கலந்து பூசினுல் விஷம் தீரும்.

### அகத்தி

"அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்தியே" என்று முன்னேர்கள் சொன்னுர்கள். காயை அவ்விதம் கூறியவர்கள் இலையையும், பூவையும் உணவிலும், மருந்திலும் சேர்த்துக் கொண்டார்கள் இதற்குக் கிறகத்தி, செவ்வகத்தி, சாழையகத்தி என்று பல பெயர்களுண்டு.

இதை மருந்தாகப் பயன்படுத்துவதற்கு இதன் கொழுந்தைக் காலையில் மென்று தின்ருல் வாய்ப்புண் ஆறும். குடுசம்பந்தமான நோய்களுக்கு அகத்தி இலை சிறந்த பயன் கொடுக்கும். அகத்தி இலைச் சாற்றை நல்லெண்ணெயுடன் காய்ச்சி வெந்தயத்தைப் பாலில் அரைத்துக் கலந்து தேய்த்து முழுகினுல் தீராத நோய்கள் எல்லாம் தீரும். இதன் பூவைப் பசுநெய்யில் வதக்கி உண்டால் வெப்பமும், பித்தமும் நீங்கும்.

### சீந்தில்

ஆற்ருேரங்களில் செழித்து வளரும் இயல்பு கொண்ட சீந்தில் அமுதம் என்றும், அமுதவல்லி என்றும், சாகா மூலிகை என்றும் பெயர் பெறும். இது கொடியினத்தைச் சேர்ந்தது. இதிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து அமிர்தசர்க்கரைஎன்று பெயர் பெறும். இதை உட்கொண்டால் நீரிழிவு நோய் குணமாகும். இது வாதம், பித்தம், சிலேற்பனம் என்று கூறுகின்ற திரிதோசங்களைச் சமப்படுத்தி இரத்தக் குறைப்பைக் குறைத்து ஆயுளை அதிகரிக்கச்செய்யும்.

### கீரை வகைகள்

கீரை வகைகள் இறைவன் அருளிய இயற்கைக் கொடைகளாகும். பொன்னை எறிந்தாலும் பொடிக்கீரையை எறியாதே என்பது பழமொழி.

கீரை வகைகளைத் தாதுப் பொருட்களின் தாய்மார்கள் எனவும், புரதங்களின் புகலிடம் எனவும், உயிர்ச் சத்துக்களின் உறைவிடம் எனவும், கல்சியம், கனியமுதம் எனவும் உலோகச் சத்திற்குரியவை எனவும் வைத்தியர்கள் கூறுவர். இது வெப்பத்தைத் தணித்துக் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

# ஈழத்துக் கவிஞர் பக்கம்

## பாட்டோடு பொருளாவோம்!

சொல்லுகின்ற மொழியதுவோ தேனை வெல்லும்!
சுடர் கொண்ட கண்களது என்னைக் கொள்ளும்!
நல்லிதயம் உந்தனுக்கே உடைமையாகும்!
நாயகி நின் கருங் கூந்தல் மேகமாகும்!
மெல்ல முகில் விலகி வந்த நிலவு தானோ?
மெல்லிடை நின் வதனம் என்றே ஐயம் தோன்றும்
கொள்ளுகின்ற ஓர் நிலையை கொள்ள வைத்த
குமரியவள் அசைகின்ற மலரின் தோட்டம்!

நாட்டியமாய் நீ ஆடி நடக்கும் நேரம்!
நானென் தன் நிலை மறந்து நின்னைப் பார்ப்பேன்,
வாட்டமெல்லாம் தீர்க்கின்ற வஞ்சியே நான்
வாழ்வினிலே மனைவியென ஆக்கிக் கொள்வேன்
ஏட்டோடு எழுத்தாகி உலகமீதில்
என்றென்றும் இருவரும் இணைந்து கொள்வோம்
பாட்டோடு பொருளாவோம் இணைந்த வாழ்வில்
பாரினிலே இன்பமே காணுவோமே

★ கல்வியங்காடு சாணு

## அடையாளம் கண்டுகோள்

இந்த
பூமியின் மீது
ஒரு
பூ விழுவதால்
பூமியின் உடம்பு
புண்ணுகி விடாது
உன் கண்ணீர்ப்பூவிலிருந்து
ஒரு
காம்பு கழன்று
விழுந்தாலும்
என் கவிதையின் உடலில்
காயம் பட்டுவிடும்
என்ருவது
ஒரு நாள்
என்னிடமிருந்து
வரும் தூதுவனிடம்
கணையாழி இருக்காது
கவிதை இருக்கும்
அடையாளம்
கண்டு கொள்.

★ டொஸ்சி

## பூக்கள் வழங்கும் பாக்கள்

நாங்கள்
இன்னும்
பூத்துக் கொண்டிருப்பது
தென்றலுக்காகவே!

தென்றல்
இன்னும்
வீசிக் கொண்டிருப்பது
எங்களுக்காகவே!

தென்றலின்
நண்பர்கள்
நாங்கள்
கொடுங்காற்றின்
கோபக்காரர்கள்
நாங்கள்!

தென்றல்
எங்களை
முத்தமிடும்
புயல்
நம்முடன்
யுத்தமிடும்!
மென்மையின்
உதாரணம்
நாங்கள்
பெண்மையின்
வர்ணிப்புக்கள்
நாங்கள்!

எங்கள்
இதழ்களுக்கு
திறப்பு விழா
நடக்கும் போது
அருந்த வரும்
வண்டுகள்,
இறப்பு விழா
நடக்கும் போது
வருந்த வருவதில்லை!

நாங்கள்
காலந்தோறும்
ஆண்டவன்
காலடியில்
அர்ச்சிக்கப் படுகின்றோம்
அப்பொழுதெல்லாம்
அவனிடம்
வன்மை
வரம்தான்
கேட்கின்றோம்
ஏனென்றால்
புயலோடும்
வண்டுகளோடும்
புரட்சி செய்ய!

எங்கள்
பெயர்
பூக்கள்
நாங்கள்
பாடுவது
சோகப் பாக்கள்!

நாங்கள்
பூப்பதை நிறுத்தி
விடுவோம்
ஆனல்
தென்றல்
எங்களுக்காக
வீசிக் கொண்டிருக்கிறது!

நாங்கள்
இன்னும்
பூத்துக் கொண்டிருப்பது
தென்றலுக்காகவே!

★ ஜே. கே. பா.

## ஏக்கங்கள்

நான் படித்தேன்
பட்டங்கள் பெற்றேன்
அறிவியல் அழகியல்
கவின்கலை நுண்கலை
ஓவியம் காவியம்
நாட்டியம் சங்கீதம்
வயலின் பியானோ
இப்படி நிறைய
கற்றேன் மேலைநாட்டு
இசையுடன் பாடவும்
தெரியும் எனக்கு
அழகிலே எனக்கு
குறைச்சலோ இல்லை
எத்தனையோ பேர்
பெண் பார்க்க வந்தனர்
எதிர் பாராமல்
எனக்கு விவாகமுமாச்சு
எனது படிப்பும் பட்டமும்
என்ன ஆச்சு
சங்கீத மேடைகள்
ஆடல் அரங்குகள்
மேடைப் பேச்சுகள்
எல்லாம் வீட்டிலேதான்

★ சுரா

## கருகியசெடி

காலையில் மட்டும்
தண்ணீர் விட்டு
வளர்த்த மரங்கள்
பூத்துக் காய்த்து
கனி தருகையில்
அல்லும் பகலும்
அன்பால் வளர்த்த
காதல் செடி
மட்டுமேன்
பட்டுவிட்டது
காரணம் தெரிந்தும்
நாளும் தவறாமல்
நீர் வார்க்கிறேன்
அது......
பெருகி வரும்
தண்ணீரல்ல
உருகிவரும்
கண்ணீர்....

★ நுணுவில் நாகராஜா

## மனதில் ஒருத்தி

முத்தான எழுத்து
என்று சொல்லி
முத்துப் பற்கள்
தெரியச் சிரித்தாள்
பித்தானது...
மன மென்று
பின்னர் தான்
தெரிந்தது ..
சொத்தாக்க...
நினைத்த போது
சொன்னார்கள்
தாரமும் குருவும்
தலை விதி என்று
வேறு வழி
தெரியாமல்
விழித்த போது
விடிந்தது...
கண்டது கனவு
என்று புரிந்தது
என்றாலு மவளை
மனதி லிருத்தி
போற்று கின்றேன்.

★ ராஜா

## எத்தனை எத்தனையோ?

எழுத்தறி விக்க வந்த
எங்கள் இறைவனார்களுக்கு
தாங்கள் படிப்பிக்க
ஒரு பாடசாலை
தங்கள் பிள்ளைகள் படிக்க
வேறோர் பாடசாலை
கெளரவ பதவிகள் வகிக்க
இன்னொன்று
ரியூசன் கொடுக்க
வேறொன்று
இவர்கள் தேவைகள்தான்
எத்தனை எத்தனையோ?

★ சி. சதாசிவம்

## 'பெட்டி' உரசியும்! 'குச்சி' தீப் பற்றும்!

பெட்டியில் குச்சியில் பூசிய மருந்தவை
ஒன்றுடன் ஒன்று உரசில் 'தீ' பற்றிட
தக்கதாய் இரண்டிலும் சரியா யிருந்தால்
பெட்டியில் குச்சி உரசினு லேதான்
பற்றும் குச்சியில் 'தீ' யென் றில்லை
பெட்டியே! குச்சியில் உரசி னுலும்
பற்றி எரியும் குச்சிதான்! —பாவம்!;
பாவ மாயினும் வேணு மதற்கிது!,
இதனை மறந்து "பெட்டியில் குச்சி
உரசா விட்டால் குச்சியி லேதீ
பற்ருது" என்று பகர்வது சரியா?
பெட்டி உரசியும் குச்சிதீப் பற்றும்!
இன்றைய 'பஸ்'பிர யாண நெரிசலை
தங்கள் நோக்கிற்குச் சாதகமாக்கி
ஒருபா லாரை ஒருபா லார்கள்
உரசும் 'திரு+விளையாட்டி'ல் இறங்'கிடும்
'பிரச்சனை'களில் தம், பேரைக் கெடுக்கும்
செய்தக்க செய்யத் துணிவில் லாத
செய்தக்க வல்ல செயத்துணி வுளசில
இளைய தலைமுறை இருபா லாரதும்
சிந்தனைக் கித்'தீக் குச்சி'யும் 'பெட்டி'யும்

★ அல்லை க. வ. ஆறுமுகம்

## புதுமை வேண்டும்!

பிறரின் இன்பம் தன்னைப் பார்த்து
பெருமை கொள்ளும் உள்ளம் – அந்த
உறவினலே இணையும் மனித
இயல்பின் உயர்வு வேண்டும்!

ஒருவர் சொத்தை திருட எண்ணு
உயர்ந்த நீதியோடு – இவ்
இருவர் நேர்மை உழைப்பினுலே
இணையும் சொந்தம் வேண்டும்!

காற்றைப் போல எங்கும் நிறையும்
கருணை மேன்மை என்னும் – தேன்
ஊற்றைப் போலும் உயர்ந்த செய்கை
உலகில் என்றும் வேண்டும்!

நோயில் வாடும் எதிரி மீதும்
இரங்கும் அன்பு கொண்டு – உயர்
நேய உணர்வில் உதவும் புனித
நியதி உலகில் வேண்டும்!

எந்தத் துன்பம் வந்த போதும்
இதய அமைதி கொண்டு – பிறர்
சிந்தை நோகும் செயல்கள் புரியா
சிறந்த உள்ளம் வேண்டும்!

சுரண்ட லாலே சேர்க்கும் பணமும்
சிறப்பும் நிலைப்பதில்லை – அந்த
வரண்ட அறிவின் பொய்ம்மை வாழ்வு
மாறும் புதுமை வேண்டும்.

★ வளலாய் ரஞ்சன்

## அழகு இருக்கும் இடம்

முன்னழகு பின்னழகு மேல்கீ ளிடையழகென்
றெண்ணியொரு பெண்ணழ கென்னுதே – கன்னியவள்
'மெல்ல நடத் தல்' ஒன்றே! சொல்லும்! அவளுடலோ
டுள்ளமும்! நல்ல அழ' கென்று.

★ ஈழமாஜினி

## இல்லறத்தின் இலட்சியம்

பழந்தமிழ் வாழ்க்கை காட்டும்
பயன்மிகு குறிக்கோள் உண்டு
இரவலர் வீடு வந்து
இரப்பது பெருமை யாகும்
வராமலே இருந்து விட்டால்
வாழ்க்கையில் சிறுமை யாகும்
தலைவனே கூறு கின்றன்
தலைவியைப் பிரியும் போது

உன்னை யான் பிரிவேனுகில்
உற்ற என் கடமைவாழ்வில்
இரவலன் என்னை விட்டு
இருப்பது பலநாள் ஆகும்
என்றவன் தனது கூற்றை
எளிதினில் எடுத்து ரைப்பான்
காதலன் அவள்மேல் கொண்ட
காதலுக் குறுதி யாகும்.

தேடிய பொருள் அழிக்கும்
திறன் உள்ளோர் மக்களாலே
பொருளது உள்ளார் என்று
ஒருவரும் மதிக்க மாட்டார்
பொருளது இல்லா வாழ்க்கை
புவியினில் இரந்து வாழும்
இரவலர் வாழ்வு தன்னில்
இழிந்ததாம் என்ப தாலே

ஆண்மகன் உலகில் எங்கும்
அலுவலாய் செல்வ தாலே
பலருடன் பழகும் பண்பு
உலகினில் இயற்கை தானே
கடமையைப் போற்றும் வாழ்வு
காதலன் உடைய தென்றால்
காதலி உடைமை யெல்லாம்
காதலன் தானே ஆகும்.

★ வ. யோகானந்தசிவம்

# நம்பிக்கை நாணயத்தின் சின்னம்-ஷப்ரு



'ஷப்ரு' தரும் புதிய வட்டி வீதங்களை
கூர்ந்து நோக்குங்கள்!
ஆகா! பிரமாதம்! பரமதிருப்தி
என்றே ஆனந்திப்பீர்கள்!

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,336 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,653 | 58,970,365 | 100,577,482 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,[illegible] | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,208,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

### பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
A. I. B. (Lond), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்,
A. I. B., (Lond), பொது முகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி,
B. A. (Hons)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்.

### முதலீட்டுப் பாதுகாப்பு

ஷப்ருவின் உறுதியும் அபரிதமான வளர்ச்சியும் உங்கள் முதலீட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றன. வங்கியியலிலும் நிதியியலிலும் சிறந்த தகைமையும் அனுபவமும் உள்ள எமது முகாமையாளர்களின் நிர்வாகத்திறன் அதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

### திறமையான சேவை

வாடிக்கையாளரின் வெற்றியும் திருப்தியுமே எமது பிரதான நோக்கமாகையால் அவர்களின் கோரிக்கைகளையும், தேவைகளையும் சிநேகபூர்வமாக உடனுக்குடன் கவனித்து திறமையான சேவைகளை வழங்குகின்றோம்

### சிறந்த வருமானம்

ஷப்ரு கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள் பல்வேறு விசேட சலுகைகளையும் வசதிகளையும் வழங்குகின்றது. உங்கள் தேவைக்கேற்ப வட்டியை மாதாந்தம், காலாண்டில் அல்லது முதிர்ச்சியில் பணமாகவோ, காசோலையாகவோ அன்றி வங்கிக் கணக்கூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

**SHABRA UNICO FINANCE LIMITED**
61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL. 589310, 500576.
**ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.**
யாழ் முகவர்: 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 22073 - 24805

விலங்குகள் விதம் விதம்: 8

# நீர் யானை

இதற்கு ஆங்கிலப்பெயர் 'ஹிப்போடோமஸ்' ஆகும். இது கிரேக்க வார்த்தை ஆகும். இதன் அர்த்தம் ஆற்றுக் குதிரை ஆகும். ஐரோப்பியர் இதனை ஆற்றுப் பன்றி என்கிறார்கள்.

நீரிலும் நிலத்திலும் வாழும் இவ்விலங்கின் தோல் மென்மையானதால் வெப்பத்தைத் தாங்காது. அதனால் பெரும்பான்மை நேரம் நீரில்தான். நீரினுள் 4 நிமிடம் மூச்சடக்கி நிற்கும். மூக்கில் நீர் புகாதவாறு வால்வு உள்ளது. உலகின் இரண்டாவது பெரிய மிருகம் நீர் யானை தான். ஆபிரிக்காவின் நைல் நதியிலும், ஏரிகளிலும் நீர் யானைகள் அதிகம் வாழ்கின்றன.

இவை நீரை விட்டு வெளியே வந்ததும் அதன் உடல்மேல் வியர்வை போன்ற சிவப்பு நிற எண்ணெய் அரும்பும். இது அதன் மென்மையான உடல் மீது ஏற்படும் காயங்களை ஆற்றுமாம்.

சைவப்பட்சிணியான நீர் யானை ஒரே தடவையில் 180 கிலோ நிறையுள்ள உணவை உண்ணும். இவை நீரிலுள்ளேயே குட்டிகளை ஈனும். பிறந்ததும் குட்டி நீரினுள் நீந்தும் தன்மையைப் பெற்றுவிடும்.

சாதாரணமாக நீர்யானை யாரையும் தாக்காது யாராவது கோப மூட்டினால் யானைத்தந்தம் போன்ற தன் கூரிய பற்களால் கிழித்து விடும். நீர் வாழ்வன வற்றுள்ளும் கூட திமிங்கிலத்திற்கு அடுத்ததாக உள்ளது நீர் யானை ஆகும்.

இதன் நிறை மூன்று முதல் நான்கு தொன்கள் வரையாகும். நீளம் $4\frac{1}{2}$ மீற்றராகும்.

மிகவும் சாதுவான நீர் யானையின் ஆயுட்காலம் 40 ஆண்டுகளாகும்.

- தி. தவபாலன்

## பாடசாலை செல்வோம்

பாடசாலை நோக்கிப்
பாலர் நாமும் செல்வோம்
பாடல் பல இசைப்போம்
பழங்கதைகள் படிப்போம்

ஆட்டுக் குட்டிக் கதையும்
அழகு நிலாப் பாட்டும்
காட்டுப் புதினம் யாவும்
கேட்டு இன்பம் அடைவோம்

வண்ணக் கலவை கொண்டு
எண்ணமெல்லாம் வரைவோம்
மண்ணை அள்ளி எடுத்துச்
சின்ன வீடு அமைப்போம்

காசால் கிடைத்திடாத
கலைகள் எல்லாம் அளிக்கும்
ஆசான் எம்மை அழைத்து
ஆதரவு தருவார்.

பி. பி. அந்தோனிப்பிள்ளை

## முரசொலி பூந்தோட்ட
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்: ..............................

வயது: ..............................

பாடசாலையின் பெயர்: ..............................

கல்விகற்கும் வகுப்பு: ..............................

வீட்டு முகவரி: ..............................

கையொப்பம்: ..............................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... ..............................

திகதி பெற்றார் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினான்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்)




## அதிர்ஷ்டம் தரும் முத்திரைகள்

முத்திரை சேகரிப்பு ஒரு பொழுதுபோக்கு மட்டுமல்ல சிலவேளைகளில் பணம் தரும் அதிர்ஷ்டமான பொழுதுபோக்கும் கூட. இதோ சில அதிர்ஷ்டங்களும், அதிர்ஷ்டம் பெறும் வழிகளும்.

1980 ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டு ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நடைபெற்றது. அதனையொட்டி மேற்கு ஜேர்மன் அரசு ஒரு ஒலிம்பிக் முத்திரையைத் தயாரித்தது. ஆனால் ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற ஒரு பிரச்சனையில் ரஷ்யா தலையிட்டதன் காரணமாக மேற்கு ஜேர்மன் அரசு தான் தயாரித்த அந்த முத்திரையை வெளியிடவில்லை. அதன் ஒரு மாதிரி முத்திரை அவ்வரசின் தபாலக அமைச்சரிடம் இருந்தது. 'கார்ட் ஜெஸிடில்' என்ற அமைச்சரின் மனைவிக்கு இம் முத்திரை பற்றிய விபரம் தெரியாததால் ஒரு சிகரட் நிறுவனப்போட்டி ஒன்றுக்கு ஒட்டி அனுப்பிவிட்டார். அச் சிகரெட் கம்பனிக்கு வரும் முத்திரைகளை வாங்கி ஏலம் விடும் விற்பனையாளருக்கு இம் முத்திரை கிடைத்தது. பார்க்காத முத்திரையைப் பார்த்த ஏலக்காரர் அது இதுவரை வெளியிடப்படாத முத்திரை என ஊர்ஜிதம் செய்து கொண்டபின் விளம்பரம் செய்து 7400 டச் மார்க்கிற்கு விற்றார் இப்படிப் பல வகைகளில் முத்திரை அதிர்ஷ்டங்களைத் தருகிறது.

நோர்வேயில் 1863 இல் வெளியிடப்பட்ட 3 சிலிங் முத்திரை ஒன்று மிகப் பழைய முத்திரை என்றதன் காரணமாக 6 லட்சம் 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டது.

இந்தியாவில் நடந்த ஆசிய விளையாட்டுப்போட்டியின் போது அந் நாடு அர்ச்சுனன் மச்சயந்திரம் எய்யும் படத்தை வெளியிட்டது. ஆனால் அதில் அர்ச்சுனனிற்குப் பதில் கிருஷ்ணனை தவறாக போட்டதால் அது மிகவும் மதிப்பு மிக்கதாகப் போய் விட்டது.

இது போல் தவறுகள் உள்ள முத்திரைகள் மதிப்பை அதிகமாகப் பெறுகின்றன.

## நல்லன வேண்டும்

அன்பைப் பேண வேண்டும் ஆக்கம் சிறக்க வேண்டும்
இறைவன் அருள் வேண்டும் ஈகை நிலைக்க வேண்டும்
உண்மை உயர்வு வேண்டும் ஊக்கம்உழைப்பில் வேண்டும்
எதிலும் தூய்மை வேண்டும் ஏற்றம் வாழ்வில் வேண்டும்
ஐக்கியம் பேண வேண்டும் ஒன்றாய் வாழவேண்டும்
ஓங்கு புகழ் பெற வேண்டும் ஔவை அறிவுரைவேண்டும்

க. நிரஞ்சன் (அங்கத்தவர் இலக்கம் 16)

## பூந்தோட்ட அங்கத்தவர்கள்

இலக்கம் 101 சின்னத்தம்பி ஆனந்தகுமார்
வயது 11, சாவகச்சேரி இந்துக்கல்லூரி

இலக்கம் 102 எழிலினி வெற்றிவேலு
வயது 13, இராமநாதன் மகா வித்தியாலயம் உசன்.

இலக்கம் 103 ஜெயந்தி தனபாலசிங்கம்
வயது 12, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

இலக்கம் 104 இந்துநாதன் திலகநாதன்
வயது 12, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இலக்கம் 105 ஜெயந்தி நடராஜா
வயது 11, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

இலக்கம் 106 சண்முகநாதன் சண்முகரூபன்
வயது 13, ஹாட்லி கல்லூரி பருத்தித்துறை.

இலக்கம் 107 திருமகள் தில்லைநாதர்
வயது 09, கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், யாழ்ப்பாணம.

இலக்கம் 108 துரைவீரசிங்கம் துசியந்தன்
வயது 13, உரும்பிராய் இந்துக் கல்லூரி.

இலக்கம் 109 சு. சிவபாதமூர்த்தி
வயது 13, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இலக்கம் 110 ஜீவரத்தினம் சஜீவ்ராம்
வயது 13, செங்குந்தா இந்துக் கல்லூரி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

குட்டிக்கதை

## புதல்வர் இருவர்

ஓர் ஊரிலே முதியவர் இருவர் இருந்தனர் இவர்கட்கு இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்தனர் மூத்தவன் இராமன் இளையவன் கண்ணன். இருவரும் வளர்ந்து பெரிதாகி வந்தவுடன் இராமன் வெளிநாட்டுக்கு உழைப்பதற்காகப் போய்விட்டான். இளையவன் கண்ணன்தான் தாய் தந்தையருடன் வசித்தான்.

இராமன் வெளிநாட்டுக்குச் சென்றானே தவிர தாய் தகப்பனுக்கு பணமோ, கடிதமோ ஒன்றையும் அனுப்புவதில்லை. இளையவன் கண்ணன்தான் கூலிவேலை செய்து தன் பெற்றோரைக் காப்பாற்றிவந்தான்

சில வருடங்கள் கழிந்தன. வெளிநாடு சென்ற இராமன் ரீ. வி. டெக் பிரிஜ் என்று பல வெளிநாட்டுப் பொருட்களோடு தனது சொந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

தன் வீடு இன்னும் பழைய நிலையில் இருப்பதைக் கண்டான். அங்கே ஏழ்மை நிலையில் வாடிப்போயிருந்த கண்ணனை அடையாளம் கண்டு கொண்டான்.

பின்னர் தனது பெற்றோர்களை பார்க்க ஆவலாக இருப்பதை தனது தம்பியிடம் சொன்னான்.

அவர்கள் இறந்து பல ஆண்டுகளாகி விட்டன என்று சேதி கேட்டு மனங் கலங்கினான்.

நான் இவ்வளவு ஆடம்பரப் பொருள்களைக் கொண்டுவந்து என்ன! எனது பெற்றோரை நான் சரியான முறையில் கவனிக்கத் தவறி விட்டேனே! எனது பெற்றோரை நான் இனி எங்கே காண்பேன் என்று வாய் விட்டு அழுதான் இராமன்.

கண்ணன் தான் பெற்றோருக்குப் பணிவிடை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்ததே என்று அமைதியோடு இருந்தான்.

செல்வி தீபிகா நவரத்தினராஜா
(அங்கத்தவர் இலக்கம் 11)

## தெரிய வேண்டியவை

(1) நடு இரவில் சூரியன் தெரியும் நாடு என்று எதைச் சொல்கிறோம்?

ஜப்பான்நாடு

(2) 1963-ம் ஆண்டில் சமாதான நோபல் பரிசு பெற்றவர் யார்?

மார்ட்டின் லூதர் கிங்

(3) பிளாஸ்டிக் பொருள் எப்பொழுது, எங்கே முதன் முதல் உருவானது?

1950-ல் அமெரிக்காவில்

(4) ஆசியநாட்டு விளையாட்டுப் போட்டிகள் எப்பொழுது முதன் முதல் நடைபெற்றன?

1951-ல் புது டில்லியில்

(5) எந்த ஆண்டு புதுடில்லி இந்தியாவின் தலைநகராக்கப் பட்டது?

1912-ல்

ச. வெண்மதி
(அங், இலக்கம் 60)

# மனிதனுக்குச் சவாலாயுள்ள கம்பியூட்டரின் விந்தைகள்

தி.என்.எஸ்.உதயசந்திரன்

இருபதாம் நூற்றாண்டில் வியத்தகு சாதனைகள் நிகழ்ந்துள்ளன. நிகழ்ந்து கொண்டும் இருக்கின்றன. இன்று நாம் வாழும் உலகமோ, புதுமை, புதுமை என்று புலம்பிக் கொண்டிருக்கும் உலகமாகும். புதுமை என்றால் ஒரு துறையில் மட்டுந்தானா? இல்லை. மருத்துவத்தில் புதுமை, வியாபாரத்தில் புதுமை, கல்வியில் புதுமை, கலையில் புதுமை, கட்டடக் கலையில் புதுமை, உடையில் புதுமை, ஆராய்ச்சியில் புதுமை, விண்வெளியில் புதுமை, விளையாட்டில் புதுமை, வீரத்தில் புதுமை, விஞ்ஞானத்தில் புதுமை, என்று புதுமையைத் தேடிச் சுழல்கின்றது.

இது கம்பியூட்டர் யுகம். இன்று உலகில் எவ்வளவோ சிக்கலான விஷயங்களைத் தீர்க்க கம்பியூட்டர் உதவுகின்றது. மேலும் திறமைமிக்க புதிய புதிய கம்பியூட்டர்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மிகத் திறமையான கம்பியூட்டர்களை உருவாக்குவதில் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகள் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நவீன தொழில்நுட்ப யுகத்தின் தனிப்பெரும் சிறப்பாக விளங்கும் கம்பியூட்டர் என்ற கணிதப்பொறிக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது? சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே கம்பியூட்டர்கள் இருந்து இருக்கின்றன என்றால் ஆச்சரியமாக இல்லையா? ஆனால், அப்போதெல்லாம் கம்பியூட்டர்கள் ஒரு இயந்திர சாதனமல்ல.

சில நபர்களையே அப்படிச் சொல்லி வந்தார்கள் முக்கியமான ஊர்களில் எல்லாம் பஞ்சாங்கம் கணிப்பதற்கு சூரியன சந்திரன் நட்சத்திரங்கள் போன்றவற்றை அல்லும் பகலும் உற்றுநோக்கி வந்து தகவல்களைத் கொடுக்கும் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டு வந்தவர்களையே கம்பியூட்டர் என்று அதாவது கணிப்பவர்கள் என்று அழைத்து வந்தார்கள். அதிலிருந்து பிரிந்தது தான் கம்பியூட்டர் என்ற சொல்லாகும்.

## வீட்டுக்கு வீடு கம்பியூட்டர்

அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் வீட்டுக்கு வீடு காட்சிவானொலிப் பெட்டிகளையும் பலவிதமான கம்பியூட்டர்களையும் மிகச் சாதாரணமாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. மனிதன் செய்து வந்த பல வேலைகளை இன்று கம்பியூட்டர்கள் மிகவும் இலகுவாக செய்து முடிக்கின்றன. மனிதன் ஒரு வேலையைச் செய்து முடிக்க பல மணி நேரங்களைச் செலவு செய்தான். ஆனால் கம்பியூட்டரோ சில நிமிட நேரங்களில் பல வேலைகளைச் செய்து முடித்து விடுகின்றது.

நாள்தோறும் இலட்சக் கணக்கான கடிதங்களும் பார்சல்களும் ஒருதலைமை அஞ்சல் நிலையத்திற்கு வருகின்றன வென்றால் அவற்றைப் 'பிரிப்பது' என்பது எளிதான வேலையல்ல. எண்ணற்ற மனிதர்கள் மிகுந்த சுருத்தோடு இயந்திரம் போல் உழைக்க வேண்டும். இதுவும் நெடு நேரம் பிடிக்கும்.

வளர்ச்சியடைந்த நாடுகள் தமது தலைமை அஞ்சல் நிலையத்திற்கு வரும் கடிதங்களையும் பார்சல்களையும் விரைவாகப் பிரித்து அனுப்பும் வேலையையும் தற்போது கம்பியூட்டரிடம் ஒப்படைத்துள்ளன. ஜேர்மன் குடியரசின் தலைமைத் தபால் நிலையத்திற்கு நாள்தோறும் சுமார் 10இலட்சம் பார்சல்களும் 30 இலட்சம் கடிதங்களும் வருகின்றன. இவற்றை விரைவாகப் பிரித்தனுப்பக் கம்பியூட்டர்கள் பயன்படுகின்றன.

## செய்திகளை வடிவமைக்கும் கம்பியூட்டர்

லண்டன் பி.பி.ஸி வானொலி நிலையம் ஆங்கிலம் உட்பட முப்பத்தெட்டு மொழிகளில் ஒலிபரப்பை நடாத்தி வருகின்றது. இந்த வானொலி நிலையதின் பல்வேறு மொழிப் பிரிவுகளுக்கு வரும் கடிதங்களை பிரித்து அனுப்பும் வேலைகளை கம்பியூட்டர்களே செய்கின்றன.

இந்த வானொலி நிலைய தலைமைப் பணிமனையான 'புஷ் ஹவுஸ்' பணிமனைக்கு நாள்தோறும் பத்துலட்சத்துக்கும் அதிகமான வார்த்தைகள் கொண்ட செய்திகள் வந்து குவிகின்றன. அவற்றையெல்லாம் சீர்தூக்கி உண்மைநிலை திறம்பாமல் பல்வேறு துறைகளில் இருந்து பெறப்பட்ட செய்திகளுடன் ஒத்துப் பார்த்து செய்திகளை வடிவமைக்கும் பணியில் கூட கம்பியூட்டர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

## கம்பியூட்டர் திருமணம்

பெரியோர்கள் ஜாதகப் பொருத்தம் பார்த்து திருமணம் செய்து வைப்பது நம் நாட்டு வழக்கம். இன்று காதல் திருமணம் செய்து கொள்பவர்கள் திருமணத்திற்கு முன்னரே ஒருவரோடொருவர் பழகிப் பொருத்தம் தெரிந்து கொள்கின்றனர். அறிவியல் வளர்ந்துள்ள

## தகவல்-குறிப்பு-செய்தி-விபரம்
## விஞ்ஞானம்

தற்காலத்தில் கம்பியூட்டர்கள் பொருத்தம் பார்த்துச் சொல்கின்றன. திருமணம் செய்து கொள்ள விரும்பும் ஆண்களும் பெண்களும் தங்களைப் பற்றிய குறிப்புகளைப் பதிவு செய்து கொள்கின்றனர் இந்தக் குறிப்புக்களின் அடிப்படையில் கம்பியூட்டர் பொருத்தமான மணமக்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கின்றது.

ஜப்பான் நாடு எல்லாத் துறைகளிலும் சாதனை படைத்து வரும் நாடாகும். ஜப்பான் நாட்டு உற்பத்திப் பொருட்கள் தரமானவை என்ற கருத்து எங்கும் நிலவுகிறது. அந்த ஜப்பான் நாட்டில் கண்களுக்கு மேக்கப் செய்யும் அழகு நிலையங்கள் அதிகமாக இருக்கின்றன.

அங்கே முதலில் கண்களைப் போட்டோ எடுக்கின்றார்கள். பின்பு கண் புருவங்கள் எப்படி அமைக்கப்பட வேண்டும், அந்தப் புருவங்களை எந்த வண்ணத்தில் எவ்வளவு அளவில் வரைய வேண்டும் என்பது போன்ற சகல விபரங்களையும் வண்ணத்திலேயே அச்சிட்டுக் கொடுத்துவிடுகின்றது கம்பியூட்டர். பின்பு அதைப் பார்த்து மேக்கப் செய்கின்றார்கள்.

## கல்கியூலேற்றர்

இப்போது எலக்ரோனிக் சாதனங்கள் வகுப்பறைக்குள்ளும், வீட்டுக்குள்ளும் நுழைந்துவிட்டன. கல்கியூலேற்றரைப் பயன்படுத்திக் கணக்குகளைச் செய்வதால் மாணவர்களின் திறமை குறைந்துவிடும் எனச் சில பிரபல கல்லூரி அதிபர்கள் கண்டித்தார்கள். சில கல்லூரிகளில் மாணவர்கள் இதைப் பயன்படுத்த தடையும் விதித்தார்கள்.

ஆனால் இன்று வகுப்பறைகளிலும், சோதனைக்கூடங்களிலும் கல்கியூலேற்றரை மாணவர்கள் தாராளமாகப் பயன்படுத்துகின்றார்கள்.

## வகுப்பறைக்குள் கம்பியூட்டர்

சமீப காலமாக மாணவரின் வகுப்பறைக்குள் மின்சார வேகத்தில் ஊடுருவி வரும் மற்றுமொரு எலக்ரோனிக் சாதனம் தான் கம்பியூட்டர். கம்பியூட்டர் என்றால் பெரிதாக இருக்குமே! மாணவர்கள் எப்படிக்கொண்டு செல்வது என்று யோசிக்கின்றீர்களா? மிகச் சிறிய அளவிலான கம்பியூட்டர்கள் சந்தைக்கு வந்து விட்டன.

## பாடம்சொல்லிக் கொடுக்கும் கம்பியூட்டர்

இந்தக் குட்டிக் கம்பியூட்டரின் வேலைத்திறன் நம்மையெல்லாம் பிரமிக்கச் செய்கின்றது. இக் கம்பியூட்டர் நான்கு வயதுக் குழந்தைக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்கும் உதாரணமாக dog என்றால் நாயின் படத்தைக் காட்டிக் குழந்தைகளுக்குப் புரியவைக்கும். சிறுவர்களுக்கான பாடல்களைச் சொல்லிக்கொடுக்கும்.

உயர்தர வகுப்பு மாணவர்கள் கணிதம், இரசாயனம், பௌதிகம் போன்ற பாடங்களை ஆசிரியரின் உதவி இல்லாமல் இந்தக் கம்பியூட்டர் மூலம் கற்றுக் கொள்ளலாம்.

இந்தக் குட்டிக் கம்பியூட்டரின் விந்தைகள் இத்துடன் நின்றுவிடவில்லை பெண்களுக்கு சமையல் கூடக்கற்றுக் கொடுக்கின்றது.

## கம்பியூட்டர் வாங்க விரும்புகிறீர்களா?

இந்தக் குட்டிக் கம்பியூட்டரை நீங்கள் வாங்கிப் பாவிக்க வேண்டுமானால் உங்கள் வீட்டில் ஒரு தொலைக் காட்சிப்பெட்டியும், ஒரு சாதாரண கசட் றெக்கோடரும் இருந்தால் போதும்

கம்பியூட்டரை கடையில் வாங்கியதும் உங்கள் வீட்டில் யாருக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். உதாரணமாக ஜி.சி.ஈ. சாதாரண தரபரீட்சைக்கு படிக்கும் மாணவனாக இருந்தால் அவனுக்குத் தேவையான கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான கசட்டையும் வாங்கிக்கொள்ளுங்கள்

முதலில்கம்பியூட்டரை ஒரு வயரினால் கசட் றெக்கோடருடனும் மறு வயரினால் தொலைக் காட்சிப் பெட்டியுடனும் இணைக்க வேண்டும். அதன் பின்னர் கசட் றெக்கோட்டில் கசட்டைப்போட்டு பட்டனை அழுத்த வேண்டும்.

கசட் சுழல அரம்பித்தவுடன் அதில் பதியப்பட்டுள்ள எல்லா விடயங்களையும் கம்பியூட்டர் கிரகித்துக் கொண்டு தன்னுடைய கீ- போட்டில் பதித்துக்கொள்ளும். பதித்துக் கொண்ட விடயங்களை உங்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் கம்பியூட்டர் விளக்கமாகக் கொடுக்கும். உங்கள் சந்தேகங்களுக்கும் விளக்கம் கொடுக்கும்.

## ஹோம்கம்பியூட்டர்கள்

இந்த மாதிரியான 'ஹோம் கம்பியூட்டர்கள்' வளர்ச்சியடைந்த நாடுகளில் தாராளமாகக் கிடைக்கின்றன. இப்போது இந்தியாவில் உள்ள கல்லூரிகளிலும் இந்த வகையான கம்பியூட்டர்களை பயன்படுத்துகின்றார்கள்.

இந்த ஹோம் கம்பியூட்டர்கள் மாணவர்களின் அறிவை வளர்க்கப் பயன்படுகின்ற காரணத்தால் பல நாட்டு மக்களும் இதைவாங்க முயற்சி செய்கின்றார்கள். இலங்கையிலும் வீட்டுக்கு வீடு கம்பியூட்டர் என்ற நிலை வெகுவிரைவில் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

---

## பேராசிரியர்..

... 8ஆம் பக்கத் தொடர்ச்சி

கருத்து விழுமியங்களுடனும் இணைந்து வளர்வதன் மூலமே நாட்டின் விருத்தி உறுதி நிலை முன்னேற்றம் ஆகியன வலுப் பெறுகின்றன. நாட்டின் முழுமை விருத்தியில் மனித வளத்தை உச்ச அளவிற்கு வெளிப்படுத்த வைப்பதும், இயற்கைவளங்களை திறம்படப் பயன்தருவகையில் செயற்படுத்த வைப்பதும் கல்வியின் அதிமுக்கிய நோக்கம். இவ்வாறு பேராசிரியர் கல்வி நோக்கங்கள்பற்றிக் கொண்டிருந்த கருத்து பழைமையையும் புதுமையையும் இணைக்கும் பங்கினைக் கொண்டிருக்கிறது.

உலகம் இன்று வேண்டி நிற்கும் கல்வி, அறிவியலும் மனிதவியலும் இணைந்ததாக அமையவேண்டும். இதில் ஒன்றின் பெருவளர்ச்சியோ, மற்றதன் புறக்கணிப்போ மனித சமுதாயத்தில் பாரதூரமான விளைவுகளைக் கொண்டு வரும். இதற்கு அறிவியல் சார்ந்த மனிதவியல் கோட்பாடுமுக்கியம் ஆகின்றது என்கிறார் பேராசிரியர்.

(அடுத்த வாரம் முடியும்)

---

## வருவதை...

.. 7 ஆம் பக்கத் தொடர்ச்சி

படுத்துவதற்காக அந்த இடத்தை விட்டுப் போகவே துணிந்து விட்டான். ''வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ?'' என்று தனக்குள் விதியை நொந்து கொண்டு அண்ணனிட்ட கட்டளையை மீறிப்புறப்பட்டான். தான் போவதால் சீதை தனியே இருப்பாள் அதனால் பல விபரீதங்கள் ஏற்படப் போகின்றன என்பதை அவன் நன்குணர்ந்தான். ஆனாலும் அபாயம் ஏதாவது நேர்ந்தால் சடாயு கவனித்துக் கொள்வான்— அவன் இயன்ற மட்டும் காப்பான் என்றும் எண்ணிக் சொண்டான். இனிவரப் போகும் நிகழ்வுகளைச் சீர்தூக்கிப் பார்த்து எதனையும் அலசி ஆராயும் மனப்பாங்குடையவன் இலக்குவன் என்பது இதனால் புலப்படுகின்றது அவன் நினைத்தவாறே பின் நடந்தது. தனிமையில் விடப்பட்ட சீதையைப் பூமியோடு தூக்கித் தேர்த் தட்டின் மேல் வைத்த இராவணன் வேகமாய்ப் புறப்பட்டான் சீதை துடித்தாள். அலறினாள் தேரையும் சீதையையும் இராவணனையும் கண்டு கொண்டான் சடாயு. சடாயு இராவணனுக்கு எத்தனையோ அறிவுரைகள் பகன்றான். காதல் பித்தேறிய இராவணனின் செவிகளில் அவை ஏறவில்லை. சடாயு இராவணனோடு கடும் போர் புரிந்து இறக்கைகள் வெட்டப்பட்ட நிலையில் மூர்ச்சித்துத் தரையில் வீழ்ந்தான்.

### சீதை பாராட்டு

சீதை இலக்குவன் கூறியவற்றைநினைந்து தனது அறிவற்ற செயலுக்காக வருந்தினாள்.

''பின்னவன் உரையினை
மறுத்துப் பேதையேன்
அன்னவன் தனைக் கடிந்து
அகற்றினேன்......''

என்று தன்னையே நொந்து கொண்டாள்.

மான் வேடத்தில் வந்திருப்பவன் மாரீசன்தான் என்று இலக்குவன் கூறியபோது அதனை மறுத்துச் சென்ற இராமன் அனுபவரீதியாகப் பின் உண்மையை உணர்ந்து இலக்குவனின் அறிவைப் பெரிதும் மெச்சினான் அதேபோன்று இராவணனோடு சமர் புரிந்த சடாயு தரையில் வீழ்ந்த வேளையில் இலக்குவனின் அபார அறிவையும் ஆற்றலையும் நினைந்து தனது பேதமைக்காக வருந்தினாள் சீதை. இவ்வாறு இராமனாலும் சீதையாலும் ஒருங்கே பாராட்டப்படும் அளவிற்கு இலக்குவன் அறிவில் மேம்பட்டு விளங்குகின்றான்.

---

## நல்வாழ்வுக்கு தேனும் மோரும்

ஆரோக்கிய வாழ்விற்கு தேன் இன்றியமையாத ஒன்றாகும். இது கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தரும். உடம்புக்கு மினுமினுப்பைத் தரும் நாடிகளைச் சுத்தமாக்கும். அறிவை வளர்க்கும் ஆண்மையைக் கொடுக்கும்.

இது வாந்தி, வயிற்றுக் கடுப்பு, சுவாசக்கோளாறு

டாக்டர்
செல்வி க. சிவதர்ஷினி

மலச் சிக்கல் முதலிய நோய்களைக் குணமாக்கும். காலையில் நீரில் கலந்து பருகினால் செமியாக்குணம் நீங்கும்.

### மோர்

''மோரை உண்டு சீரைப் பெறு'' என்பது பழமொழி நமது இரத்தத்தில் படியும் சுண்ணாம்புப் படிவுகளைக் கரைத்து வெளியேற்றி இரத்தத்தைச் சுத்திகரித்து இரத்த ஓட்டத்தை விருத்திசெய்யும்.

குட்டம் முதலிய நோய்களுக்குச் சித்த வைத்தியர்கள் மோரையே அதிகமாகக் கொடுக்கிறார்கள்.

# வாசகர் கவனத்துக்கு

''இந்து போர்ட் இராசரத்தினம்'' தொடர்கட்டுரையின் கடந்த வாரமுரசொலியில் வெளியான பகுதியின் தொடர்ச்சி தவறுதலாக அன்றைய 13-ம் பக்கத்தில் இடம்பெறவில்லை. அதனை இங்கு தருகின்றோம்.

இதன் தொடரான இவ்வாரக் கட்டுரை வழக்கம் போல வேறொரு பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

ஒனரபிள் (Honourable) என்னும் கௌரவம் சூட்டப்பெற்றது.

இந்தச் சட்டசபையில் சில வரலாற்றுச் சிறப்பம்சங்களும் அமைந்தன. பெரும்பான்மையினரான சிங்களவரின் பிரதிநிதிகள் பதினெண்மராயும், ஏனைய சிறுபான்மையினரின் பிரதிநிதிகள் பத்தொன்பது பேராயும் இருந்தனர். இங்கே ஒருசமபலப் பிரதிநிதித்துவம் அமைந்தது. இதைக் கண்டே யாழ்ப்பாணத்து பெரும் புறக்ரர்களில் ஒருவரான ஆர்.சி. புறக்ரர் என்பார் பிற்காலத்தில் 50: 50 என்னும் அமைப்பு வேண்டுமென்று கோரினூர். அது பின்வந்த பொன்னம்பலம் அவர்களின் தாரக மந்திரமாயும் அமைந்தது.

அன்றைய சட்டசபையிலமைந்த மற்றொரு சிறப்பு, அதுகாறும் தேசாதிபதியே சட்டசபைக்குத் தலைமை தாங்கி வந்தமையும் இச்சட்டசபையில் தெரியப் பெற்றவர்களுள் ஒருவர் உபதலைவர் என்னும் பெயரில் தலைமை தாங்கவும் சந்தர்ப்பம் கிடைத்தது. இத்தருணத்தில் சிங்களவர்கள் சேர் இராமநாதன் அவர்களே தலைமைக்குரியவர் எனக்குரலெழுப்ப,அவர் மறுத்துத் தாம் இலங்கையருக்காகப் பேசுவதற்குத் தலைமை பீடம் முட்டுக் கட்டையாகும் என விளக்கி; யேம்ஸ் பீரிஸ் அவர்களையே தலைமை தாங்குமாறு ஒழுங்கு செய்தார்.

இச்சபையின் மற்றொரு சிறப்பு மகாவலி கங்கையை வடக்கே திருப்பு என்று பேசிய கௌரவ பாலசிங்கம் சட்ட நிரூபணசபை என்னும் மந்திராலோசனைச் சபையை அலங்கரித்ததுமாகும். பாலசிங்கம் மகாவலியைத் திசை திருப்பு என்று பேசியபோது, போத்தல்களிலும் தகரங்களிலும் அள்ளிக்கொண்டு போவதா என்று நையாண்டி பண்ணியவர்கள், இன்று மகாவலி கங்கை வடக்கே பாய்வதைக் கண்டு வாயை என்னவோ செய்கிருர்கள்.

அன்று சிங்களவர்களுள் டொன்பாரன் ஜயத்திலக என்பவர் கேம்பிரிட்ஜ் பட்டதாரி என்பதோடு புத்த குருமாரால் உருவாக்கப்பெற்ற பெருமையும் பெற்றவர் பெரிய சேனநாயக்கமுளைப்பதன் முன் அங்கே தலைவராயிருந்தவர். அவரும் இராசரத்தினமும் சட்டசபையில் பழக்கமானவர்கள். இவர்கள் இருவரும் சைவச் சூழலுக்கு இடப்பட்ட கரிக்கோட்டை நீக்குவதற்குத் தயாராளுர்கள் இவர்கள் முயற்சிக்கு சேர் பிளவுச்சர் என்னும் பெரியார் சாதகமாக உதவி செய்யவே தேசாதிபதி அவர்களும் பெருமனத்தோடு அங்கீகாரம் அளித்தார். இதனுல் ஒருமைல் தூரத்துக்குள் வரக்கூடாது என்று வகுக்கப்பட்ட எல்லைக்கோடு நீக்கப்பட்டது ஒரு பாடசாலைக்கு அடுத்த வளவிலே வேண்டுமானுல் அந்த வளவிலேயே இன்னொரு பாடசாலை அமைக்கலாம். உதவி நன்கொடைக்குக் காத்திருக்கத் தேவையில்லை என்ற நிலைமை உதயமானது. புகை நடுவினில் இருந்த சைவத் தீ ஒளிகாலுவதாயிற்று.

இன்று மனிதவுரிமை, மாதர் உரிமை, குழந்தைகள் உரிமை என்று உலகளாவப் பேசிக் குதூகலமாகக் கொண்டாடுகின்றவர்கள் அறுபது ஆண்டுகளுக்கு முன் சைவக் குழந்தைகளின் பிறப்புரிமையாய சைவக் கல்வியை மனச்சாட்சிக்கு மாருகத் தடைபண்ணிய போக்கையே அன்று இராசரத்தினம் பகைத்தார் என்பதால், அவரை வேண்டுமானுல் விரோதி என்று வாயாரப் பேசலாம். ஆனுல் ஒன்று, அவர் எக்காரணங் கொண்டும் துரோகி அல்லர்.

இன்று சர்வோதயம், கிராமோதயம் என்று நாம் சொல்லுவதற்கு முன்னமே பிறநாட்டுப் பெரியவர்கள் எங்களுக்கு அள்ளிக் கொடுக்கிருர்கள் அன்று கிராமோதயம் என்ருல் கிராமத்து மக்கள் கல்வியறிவு பெற்றுயர வேண்டும் என்று இராசரத்தினம் கருதினுர். மனிதர் வாழும் இடம் காடாயிருக்கலாம், மேடாயிருக்கலாம், கழனியாயிருக்கலாம், கடற்கரையாயிருக்கலாம், தேடுவாரற்ற தரையாயிருக்கலாம். அங்குள்ளவர்கள் மனிதர்கள் தானே மனிதர்களுக்கு கல்விக்கண் திறக்க வேண்டுமே. கல்விக்கண் திறக்கப் பாடசாலைகள் வேண்டுமே. இங்ஙனம் கருதி எங்கணும் பாடசாலைகள் திறக்கக் கங்கணம் கட்டிய ஒருவர் வேறுயார்?

(தொடரும்)

## பிரதமர்...

... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

## பெனுஸிர் புன்னுள்ள முக்கிய பிரச்சனைகள்

பெனுஸிர் பூட்டோ இன்று பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டுப் பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளார். பாகிஸ்தானின் பொருளாதாரம் மிகவும் மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது ஒருபுறம்; மறுபுறம் நாட்டில் அடிக்கடி இரத்தக்களரியை ஏற்படுத்தி வரும் இனப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவேண்டிய தேவையும் அவருக்கு உள்ளது. ராணுவ ஆட்சிக் காலத்தின் போது ஏற்படுத்தப்பட்ட அமைப்புக்களை தொடர்ந்தும் வைத்திருப்பதா என்பதிலும் அவர் பிரச்சனையை எதிர்நோக்கியுள்ளார்

வெளிநாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரையில் ஆப்கான் பிரச்சனை அவருக்கு ஒரு சிக்கலான விவகாரமாகவே இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விடயத்தில் அமெரிக்காவின் நடவடிக்கையைப் பொறுத்தே பெனுஸிரின் கொள்கைகள் அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சீக்கிய, காஷ்மீரிய தீவிரவாதிகளைத் தொடர்ந்தும் இந்தியாவுக்கு எதிராகத் தூண்டிவிடும் நடவடிக்கைகளுக்கு அவர் ஆதரவளிக்கிருரா என்பதைப் பொறுத்தே இந்தியாவுடனுன அவரது உறவு தங்கியுள்ளது.

உலகின் முதலாவது முஸ்லிம் பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றுள்ள பெனுஸிர் இப் பிரச்சனைகளை எப்படிச் சமாளிக்கப் போகின்ருர் என்பதை உலகமே ஆவலுடன் எதிர்பார்த்துள்ளது. தேர்தலில் தனிப்பெரும்பான்மை இல்லாமல் சுயேட்சை உறுப்பினர்களினதும், சிறிய கட்சிகளதும் ஆதரவினுலேயே அவர் ஆட்சி அமைத்துள்ளதால் கத்திமுனையில் நடப்பது போன்றே அவர் நடக்கவேண்டி இருக்கும். ●

## இந்துபோர்ட்.,.

... 6 ஆம் பக்கத் தொடர்ச்சி

கத்தையும் மட்டிட்டவர். எனவே பாடசாலைகள் தோறும் தரமான நூலகங்கள் அமைத்துப் படிப்பார்வத்தை நெறிப்படுத்தவேண்டும் என்று பரிந்துரை பேசித் தாமே தரமான நூல்களைப் பகிர்ந்தளித்தவர். அவரிடம் எஞ்சியிருந்த செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி முதலான சஞ்சிகைகளில் பழைய தொகுதிகள் பிற்காலத்தில் பொதுசன நூலகத்தை அலங்கரித்தன.

அக்காலத்தில் இலங்கையில் நூற்றுக்கணக்கான புதிய பாடசாலைகள் அதிகரித்தன அன்றிப் படிப்பார்வம் கொண்ட பாலர் ஆயிரக் கணக்கில் பாடசாலைகளை நாடினர். பழைய பாடசாலைகள் நல்ல முறையில் திருத்தியமைக்கப் பெற்றன. ஆனுல் சிங்கள மக்களிடையே நூற்றுக்கணக்கான பெண்ணுசிரியர்கள் முன்வந்தமை போல தமிழரிடையே பெண்கள் முன்வரவில்லை என்றும், பெண்ணுசிரியர் ஒருவர் தானும் இல்லாத தமிழ்ப் பாடசாலைகள் பல இருந்தனவென்றும்,மட்டக்களப்பு மாநிலத்தில் சில கலவன் பாடசாலைகளில் பெண்ணுசிரியர்கள் இருக்கவில்லை என்றும் 1928 ஆம் ஆண்டறிக்கை கூறுகிறது.

அன்று இலங்கையில் 31 கல்வி மாவட்ட நிர்வாக சபைகள் பிரதேச அமைப்பில் பணிபுரிந்தபோது, யாழ்ப்பாணத்துச் சபையில் கௌரவ அ. கனகரத்தினம் அவர்கள் தலைவராயிருந்தார். இவர் பெரும் படிப்பாளியும் பட்டதாரியும், சமூக சேவையாளரும் செல்வரும் ஆவர். இவர் தமது சொந்தப்பணத்தில் அக்காலத்துத் தேசாதிபதி ஸ்ரான்லி என்பார்பெயரில் 30-7-1928ல் அமைத்த கல்லூரியே கனகரத்தின மகாவித்தியாலயமாகும் யாழ்ப்பாணத்தமிழரின் விடாமுயற்சியையும் தளராத உழைப்பையும் சட்டசபையில் பேசியபோது, ஆழக் கிணறுகளிலிருந்து தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சும் கமக்காரர் ஒத்துதவி மூலம் பட்டை பிடித்தும், துலா மிதித்தும், பாத்தி கட்டியும் உழைப்பின் காட்சி மலைநாட்டில் காண முடியாது என்று நகைச்சுவையாகப் பேசியவர். இவரே அன்று வளர்ந்து வந்த யாழ்ப்பாணத்து உள்ளூராட்சி மன்றம் என்னும் லோக்கல் போட், மாவட்ட நகர்ப்புற ஆட்சிமன்றமாக (U D C.) வளர்ந்த போது முதல் தலைவராயிருந்தவர்.

கௌரவ கனகரத்தினம் அவர்கள் தலைமையிலமைந்த கல்வி ஆலோசனைச்சபையில் அங்கம் வகித்தவர்கள் கௌரவ சு இராசரத்தினம், ஜி. சுப்பிரமணியம், ஆர். ஆர். நல்லையா, ரி.ஏச். குமறசெற், ஏ. எம். எம். அப்துல்காதர், வை சி.சி குமாரசுவாமி வணக்கத்துக்குரிய பிதா போட், கல்விப் பரிசோதகர் ஏச்.எஸ். பெரேரா ஆகியோராவர்.

இவர்களுள் குமாரசுவாமி அவர்கள் பட்டம் பெற்ற அப்புக்காத்தர், பெரும் படிப்பாளி, பெரிய சுருட்டு முதலாளி சின்னததம்பியாரின் பேரன், சிவகுருநாதபிள்ளையின் மைந்தன், சின்னத்தம்பியாரின் மாளிகையில் வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளை அவர்கள், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் அவர்கள், சிவகுருநாதனுக்குக் கற்பித்தவர்கள். சிவகுருநாதரின் நினைவாக குமாரசுவாமி தமது வீதியில் வேதாந்தமடம் அமைத்தவர். அன்றி அன்று இலவசமாகப் பாடசாலைகளில் கல்வி கற்பித்தவர். படிப்பார்வம் உள்ளவர், படித்தவர்களை மதித்தவர்.

அன்று யாழ்ப்பாணத்து எல்லையுள் 34 தமிழ்ப்பாடசாலைகளும் 10 ஆங்கில தமிழ் பாடசாலைகளும் 3 ஆங்கில தமிழ்ப் பாடசாலைகளும் (துவிபாஷா என்னும் பைலிங்குவல்) நிலவின. ஆங்கிலப் பாடசாலைகள் சம்பளப் பணம் பெற்றே பிள்ளைகளுக்குக் கற்பித்தனர். சம்பளம் கீழ் வகுப்பில் மூன்றுரூபா முதல் மேல் வகுப்பில் பத்து ரூபா வரை வசூலிக்கப்பட்டது.

யாழ்ப்பாண நகரவெல்லை முன்னர் பட்டணம் எனவே வழங்கி வந்தது. அது 1927ஆம் ஆண்டு வரை உள்ளூர் மன்ற எல்லைக்குட்பட்டிருந்தது பின்னர் வகுக்கப்பெற்ற முறையில் நகர்ப்புற எல்லைக்கு அப்பாற்பட்ட பதிகள் ஊர்ப்புறக் கல்வி நிர்வாக சபையினரின் கண்காணிப்பில் நிலவியது. இச்சபையில் சேர் இராமநாதன் அவர்கள் தலைவராயிருப்ப, அராங்க அதிபர் பே.ரி பிறவுண், கௌரவ வைத்திலிங்கம் துரைசுவாமி, கௌரவ சு. இராசரத்தினம், வணக்கத்துக்குரிய லொக்வுட். வணக்கத்துக்குரிய வாட், பெரும் படிப்பாளியாய நெவின்ஸ் செல்லத்துரை, வடமாநில கல்விப் பரிசோதகர், வடமாநில விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் ஆகியோர் இருந்தார்கள் கௌரவ இராசரத்தினம் அவர்கள் வாழ்நாளிற் பெரும் பகுதியைக் கல்விப் பணி செய்வதிலேயே பயன் செய்து வந்தார். அவர் கல்வித்துறையில் கலந்து பேசுவதிலும், ஆலோசனை கூறுவதிலும் ஆற்றல் உள்ளவராயிருந்தார். கல்வித்துறையில் நிலவிய சட்டக்கோவை கட்டுப்பாடு என்னும் கோட் (Code) அவருக்குக் கரைந்த பாடமாயிருந்தது. அன்று இலங்கையில் 1395 அரசினர் பாடசாலைகளும், 2246 உதவி நன்கொடை பெறும் தனியார் பாடசாலைகளும் இருந்தன. அரசாங்கம் கல்வியின் பொருட்டு ஒரு கோடியே இருபது லட்சத்து ஐம்பத்து மூவாயிரம் ரூபா செலவு செய்தது.

(தொடரும்)

3-வது ஜனத்திரள் வாரம்!
நியூ சாந்தி (யாழ் நகர்)
வெண்திரையில்
புத்தம் புதிய வெளியீடு
தினசரி 10.30, 2. 30 மட்டும்
''இளம் உள்ளங்களை கவரும் உணர்ச்சிமிக்க காதல் காவியம்''
★ பிரபு ★ இளவரசி
★ ரஞ்சினி ★ செந்தில்
நடித்த
''நாளெல்லாம் பௌர்ணமி''
[ஈஸ்ட்மன் வண்ணம்]
(விசேட ஜெனரேட்டர்மூலம் காட்சிகள் நடைபெறுகின்றன)
12030

கல்வி ஆண்டு 89
நாளை ஆரம்பமாகின்றன
O/L அதிகாலை மாலை நேரம்
10, 9, 8, 7, 6, 5-ம் ஆண்டுக்கான
சகல பாடங்களும்
NIRU TUITION CENTRE
Kondavil
12020

## பாராட்டு ..

... 4 ஆம் பக்கத் தொடர்ச்சி

அசடுவழிய அந்தச் சிறுகதைத் தொகுதியின் சொந்தக்காரனே நிற்பதைக்கண்டபோது, மாஸ்ரர், பேயறைந்தவர் போலாகிவிடுகின்ருர்.

''அண்ணு! உங்கடை சிறுகதைத் தொகுதியை அப்பா, எங்களுக்கும் படிக்கத் தராமல், தானும் படிக்காமல்'' என்று அவனுடைய இரசிகையான மாஸ்ரரின் மகள் இப்படியெல்லாம் அடுக்கிக் கொண்டே போகின்ருள்

அதற்குமேல் அந்த இடத்தில், நிற்கமுடியாதவனுக அவன் சைக்கிளை வேகமாக உருட்டிக் கொண்டே போகின்ருன்.

தன்னுடைய 'பாராட்டு' என்ற கதையை இப்பிடித்தான் முடிக்க வேண்டுமென்ற உற்சாகத்தோடு எழுதுகோலைக் கையிலெடுத்தான்.

''ஒரு எழுத்தாளனுக்கு, நாங்கள் கொடுக்கின்ற ஊக்கமும், ஆதரவும்தான் அவனுடைய வளர்ச்சிக்கு எருவும், தண்ணீருமாக அமைகின்றன. இந்தச் சிறுகதைத் தொகுதியை இரவலாக வாங்கிப் படிக்காமல் இந்த இருபது ரூபாவை ஒரு பெரிய காசாக எண்ணுமல் இந்தச் சிறுகதைத் தொகுதியை நீங்கள் அனைவரும் உங்கள் சொந்தப் பணத்தில் வாங்கிப் படிக்க வேண்டும்.

இதனை பேச்சளவில் மட்டும் காட்டாமல் செயலிலும் ஆதரவையும் ஊக்கத்தையும்ஊட்டினுற்ருன் இவரைப் போன்ற வளரும் எழுத்தாளர்கள் மென்மேலும், ஊக்கமடைந்து காலத்தாலும் அழியாத, இலக்கியங்களைப் படைப்பார்கள்...''

தனது சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் மாஸ்ரரின் தலைமையுரையின் ஒரு பகுதியை ஆழமாக நினைத்துப் பார்த்துக் கொண்டபோது,

மாஸ்ரரின் பாராட்டின் 'பெறுமதி' அவனுக்கு மிகவும் நன்ருகப் புரிந்து கொண்டது.

பாராட்டுச் சிறுகதையின் முடிவையும், அவ்வண்ணமே, எழுதி முடித்து விடுகின்ருன்.

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
வீடியோ விகோன்ஸ்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்
கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டு வீதி

வார முரசொலி
VARAMURASOLI

For Quality Video Filming
VIDEO Vihons
353 C, Clock Tower Road,
★ Wellington Junction.

# சர்வதேச மன்னிப்புச் சபை பிரதமர் ராஜீவுக்கு அறிக்கை

**வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை இந்திய பிரதமர் ராஜீவ்காந்தியின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.**

இது குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை இந்திய பிரதமருக்கு அறிக்கையொன்றையும் அனுப்பி வைத்துள்ளது. இலங்கை – இந்திய உடன்படிக்கையின் பின்னர் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்தும் அதற்குப் பலியானவர்கள் குறித்தும் இந்த அறிக்கையில் விபரமாகக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தஅறிக்கையுடன்விசேட கடிதமொன்றையும் இந்திய பிரதமருக்கு சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் அனுப்பி வைத்துள்ளார். இந்த அறிக்கை இந்திய அரசிற்கும் சர்வதேச மன்னிப்புச்சபைக்குமிடையேபேச்சுவார்த்தையை மேற்கொள்ள அடிப்படையாக அமையுமென தாம் கருதுவதாகவும் இக்கடிதத்தில் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

## நெடுங்கேணியில் தேடுதலால் பதற்றநிலை உருவாகியுள்ளது

நெடுங்கேணிப் பகுதியில் மீண்டும் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. இரவு வேளைகளில் இப் பகுதிகளில் ஷெல் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. நெடுங்கேணியிலிருந்து ஏவப்படும் இந்த ஷெல்கள் அயல் பகுதிகளில் வீழ்ந்து வெடிப்பதினுல் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் இப் பகுதியில் வீடுவீடாக மேற்கொள்ளப்பட்ட தேடுதலையடுத்து பலர் யாழ்ப்பாணம், நெடுங்கேணி, வவுனியா பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்கென கொண்டு செல்லப்பட்டதாக நெடுங்கேணியில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இச் சம்பவத்தின் போது இரு கிராம சேவை அலுவலர்களும் படுகாயமடைந்தார்கள்.

ஊஞ்சால்கட்டி கிராமோதய சபைத் தலைவரும் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### நெல்லியடியில்...

புறப்பகுதியில் வியாழன் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி சுந்தர்ராசன் (வயது 18) வதிரி திரு இருதயக்கல்லூரிக்கு அண்மையில் வசிக்கும் எம். தீசன் (வயது 16) ஆகிய இருவரும் மரணமடைந்தனர். இவ்விருவரினதும் சடலங்களும் அமைதிப்படையினரால் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

### முஸ்லிம்...

ஜனாதிபதி தேர்தலில் மக்கள் கட்சியின் சார்பில் போட்டியிடும் ஒஸி அபயகுணசேகராவையும் ஜனாப் அஷ்ரப் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்குத் திட்டமிட்டிருந்தது.

### ஸ்ரீமாவோ...

கொண்டுள்ள தமிழ். முஸ்லிம் மாநில யோசனையையும் அதன் அதிகாரங்களையும் புளொட் இயக்கத் தலைவர் திரு. உமாமகேஸ்வரனிடம் நேரில் விளக்கினுர். ஸ்ரீமாவோவின் இல்லத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

## மண்எண்ணெய் இன்று வழங்கல்

யாழ். பிரதான வீதியிலுள்ள லங்கா எரிபொருள் விற்பனை நிலையத்தில் (வி.ஜே. எஸ்) இன்று முதல் லீற்றர் ஒன்பது ரூபாவுக்கு மண்எண்ணெய் விற்கப்படுமென மேற்படி நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பாவனையாளர்கள் தேவையான அளவு எரிபொருளை பெறலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

### ஜனாதிபதி நாட்டு .

பெற்றுள்ளன என்பதை நான் எடுத்துரைக்க வேண்டியதில்லை. என் நாட்டு மக்களின் இன்பமான நல்வாழ்விற்கு எனது பங்களிப்பை நான் வழங்கியுள்ளேன். எனது நாட்டு மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான உரிமையைப் பேணுவதற்கு நான் மேற்கொள்ளக் கூடியனவாக இருந்த நடவடிக்கைகள் யாவற்றையும் பிரதிநிதிகளின் தவறுகளைச் சுட்டிக்காடுவதையும் அவர்களை தேர்தல் வாயிலாக மாற்றுவதையும் அவ்வாறு பேச்சு, எழுத்து எதிர்ப்பு ஆகிய ஜனநாயகத்தின் அடிப்படை சுதந்திரங்களைப் பேணுவதையும் சிறப்பான பெறுமதிமிக்கநற்பேறுகளாகக் கருதுகின்றேன்.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிலவிய பயங்கரவாதம் படிப்படியாக தென் மாகாணங்களில் பரவி அபிவிருத்தியை தடைசெய்தது. வடக்கிலும் கிழக்கிலும் இடம் பெற்று வந்த பயங்கரவாதப்பிரச்சனை 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியா- இலங்கை உடன்படிக்கைகைச்சாத்திடப்படும் வரை தொடர்ந்து தீவிரமடைந்து வந்தது. அப்போது எதிர்த்தரப்பிலுள்ள எல்லா அமைப்புக்களும் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு படைக் கலங்களைக் கையளித்தன. ஆனுல் பின்னர் ஓர் அமைப்பு உடன்படிக்கையை மீறியது.

தென் மாகாணத்திலும் பயங்கரவாதம் பரவலாயிற்று. அபிவிருத்தி வேலைகள் யாவும் அளவிட முடியாத அளவு நாடெங்கிலும் பாதிக்கப்படலாயின. 19ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் நிறைவேற்று அதிகாரமுடைய புதிய அரசாங்கமொன்றை தெரிவு செய்யும் வாய்ப்பினை நாட்டு மக்களுக்கு இப்போது வழங்குகின்றது. சுதந்திரமானதும், நேர்மையானதுமான தேர்தல்கள் நடைபெறும் என்ற எனது நம்பிக்கையை வெளிப்படுத்துவதோடு எனது பணிகளை நிறைவேற்றுவதற்கு உதவிய பல்லாயிரக் கணக்கானேருக்கு நன்றி கூறுகின்றேன்.

## யாழ்ப்பாண தபால் பொதிகள் கண்டி வழியாக இங்கு வந்தன

கொழும்பிலிருந்து சுமார் ஐந்நூறு தபால் பொதிகள் நேற்று பிற்பகல் யாழ். பிரதம தபால் அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்டன. கொழும்பில் இருந்து விசேட பஸ் வண்டியொன்று மூலம் கண்டி மார்க்கமாக வவுனியாவுக்கு எடுத்து வரப்பட்ட இப் பொதிகள் பின்னர் வவுனியாவில் இருந்து மற்றொரு பஸ் வண்டியில் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டிருந்தன.

இதே போன்று யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த வியாழக்கிழமை வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட சுமார் நானூற்றி ஐம்பது தபால் பொதிகள், கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு வந்திருந்த விசேட பஸ் வண்டி மூலம் நேற்று கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இந்த விசேட பஸ் வண்டிக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கியிருந்தனர்.

திருநெல்வேலி

## புனித சவேரியார் திருநாள்

திருநெல்வேலி புனித சவேரியார் திருநாள் இன்று கொண்டாடப்படுகின்றது. கடந்த மாதம் 25 ஆம் திகதி பங்குத் தந்தை அருட்திரு ஏ. சகாயதாசன் அடிகளாலும், அருட்தந்தை ஜீவா போல்அடிகளாலும் கொடியேற்றப்பட்டது.

புனித சவேரியார் சீன தேசத்துக்கு நற்செய்தியை எடுத்துச் சென்ற போது சான்சியான்தீவில் நோயுற்று இறந்தார். இவரது சடலம் அடக்கம் செய்யப்பட்டு பல மாதங்களின் பின்னரும் அது அழியாமல் இரத்தக் கசிவுடன் காணப்பட்டது புதுமையாகும்.

இன்றும் அவரது உடல் அழியாது கோவாவில் உள்ளது 1622-ல் திருச்சபையினுல் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

### சுடப்பட்டு மரணம்

யாழ். கோவில் வீதியில் நேற்று பிற்பகல் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார் இவரின் சடலம் சிலமணி நேரத்தின் பின்னர்அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டது.

### மாகாணசபை ..

பத்தாம் திகதி சனிக்கிழமை திருமலையில் மாகாண சபை கவர்னர் லெப்டினன்ட் ஜெனரல் நளின்செனிவரத்தின முன்னிலையில் பதவியை ஏற்பார்கள்.

திரு. வரதராஜப்பெருமாள் இருதினங்களுக்கு முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

## காலமானர்
### சோ. சச்சிதானந்ததாஸ் (சச்சி)

திரு. சோ. சச்சிதானந்ததாஸ் (சச்சி) A. I. Seed Processing Officer Paranthan காலமானுர். இவர் கந்தர்மடத்தைச் சேர்ந்த காலம்சென்ற திரு. திருமதி சோமசுந்தரம் அவர்களின் அருமைப் புதல்வரும், சௌந்தரராணி (ஆசிரியை, அருணுசல மகாவித்தியாலயம், அளவெட்டி தெற்கு) யின் அன்புக் கணவரும், ஜெயபிரசாந் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), சாயி பிரதாப் ஆகியோரின் அருமைத் தந்தையும் ஆவார். இவர் அளவெட்டி வடக்கைச் சேர்ந்த காலம்சென்ற இராஜரெட்ணம், திருமதி இராஜரெட்ணம் தம்பதியினரின் அருமை மருமகனும், சரோஜினிதேவி, Dr. கருணுநிதி (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும், சௌந்தரராஜா (உதவி உற்பத்தி முகாமையாளர், காகித ஆலை, வாழைச்சேனை), ஜெயராணி, புவனேந்திரன் ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியை அளவெட்டி வடக்கு, 'ராஜகொட்' இல் நடைபெற்று, இன்று (4-12-88) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
12084

## காலமானர்
### சின்னத்தம்பி மயில்வாகனம்

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அச்சுவேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. சின்னத்தம்பி மயில்வாகனம் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) 3-12-88 சனிக்கிழமை காலமானுர். இவர் செல்லம்மா (இளைப்பாறிய ஆசிரியை) வின் அன்புக் கணவரும், திரு. சபாபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர், சுதுமலை) யின் அன்புச் சகோதரரும், சாந்தநாயகி, விமலாதேவி, ஆலாலசுந்தரம் (Bursar, யாழ். பல்கலைக் கழகம்), கருணுதேவி, பத்மதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (A G A.), வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற சிவதாஸ், சத்தியகாந்தம், உமாதேவி ஆகியோரின் மாமனுரும், பாலசாந்தன் (U. S. A), துஷ்யந்தி, செல்வரஞ்சன், நிமலசாந்தன் (U S. A), பிரகஸ்பதி, காயத்திரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னுரின் பூதவுடல் 4-12-88 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சன்னதி வீதி,
அச்சுவேலி.

தகவல்:
ம. ஆலாலசுந்தரம்
12085

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம ஸ்ரான்லி வீதி, 62ஏ, இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 04 . 12 . 88-ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது